வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
வீர மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 216 | பக்கங்கள் : 20



03
வீண் கலந்துரையாடல் வேண்டாம்: ஜனாதிபதி, பிரதமர் விலகவேண்டும்



07
போரிஸ் ஜான்சன்: பிரிட்டன் பிரதமரை பதவி விலக வைத்த 5 காரணிகள்



10
சர்வகட்சி அரசாங்கம்: தமிழ் கட்சிகள் என்ன செய்யவேண்டும்?



11
கொழும்பில் வெடித்தது மக்கள் புரட்சி

## பிரதமர் ரணிலின் இல்லத்துக்கு தீ வைப்பு!

கொழும்பு, ஜூலை. 10

கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்குள் நுழைந்துள்ள போராட்டக்காரர்கள், அந்த வீட்டுக்கு தீ வைத்துள்ளதாக தெரிவிக்க்கப்பட்டது.

கொழும்பில் தொடரும் ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தை முற்றுகையிட்டு நடைபெற்றது.

முன்னர் பிரதமரின் இல்லத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் இல்லத்தில் உள்ளவற்றை உடைத்து சேதப்படுத்தியதாக தக

19



## பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கு நான் தயார்!

### அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை. 10

பிரதமர் பதவியில் இருந்து விலகி அனைத்து கட்சிக்கு ஆட்சிக்கு அதிகாரம் வழங்கத் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

19

# 13ஆம் திகதி பதவியிலிருந்து விலகுகின்றார் கோட்டாபய!

## சபாநாயகருக்கு அவரே அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 10

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

19

### உடன் பதவி விலகுங்கள்!

## மொட்டு கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து!

கொழும்பு, ஜூலை. 10

“உடன் பதவி விலகி, கௌரவமாக விடைபெறுங்கள்.”

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டலஸ் அழகப்

19

## பந்துலவும் பதவி துறந்தார் மொட்டில் இருந்தும் விலகல்

கொழும்பு, ஜூலை. 10

நாட்டில் ஏற்பட்டுள்ள பலத்த நெருக்கடி நிலையின் தொடராக பதவி விலகுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

அத்துடன் பொதுஜன பெரமுனவின் கட்சி

19

## தீர்மானங்களை ஜனாதிபதிக்கு உடன் அறிவித்தார் சபாநாயகர்!

கொழும்பு, ஜூலை. 10

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடி நிலையின் தொடராக அவசரமாக கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்

19



## மக்களின் கட்டுக்குள் ஜனாதிபதி மாளிகை!

### கொழும்பில் மாபெரும் மக்கள் எழுச்சி

கொழும்பு, ஜூலை. 10

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாபெரும் மக்கள் எழுச்சியின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்தனர்.

கிங்ஸ்பரி ஹோட்டல் அருகே ஆயிரக்கணக்

19

## அலரி மாளிகையும் கட்டுப்பாட்டில்!

கொழும்பு, ஜூலை. 10

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையையும் உடைத்துக்கொண்டு போராட்டங்காரர்கள் நுழைந்தனர்.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி வாசஸ்தலம்

19

## ஜனாதிபதி பதவி துறக்கவேண்டும்!

### கட்சித் தலைவர்கள் கூடித் தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்த முக்கிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக ஜனா

19

## பதவி விலக மறுத்தார் ரணில்!

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூலை. 10

சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலகவேண்டும் என்று ஏனைய கட்சிகள் முன்வைத்த கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

இந்த தகவலை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டார்.

தென்னிலங்கையில் மக்கள் போராட்டம் தீவிரம் பெற்றிருந்த

19

## காயமடைந்தோர் எண்ணிக்கை 42! மூவரின் நிலைமை கவலைக்கிடம்!!

கொழும்பு, ஜூலை. 10

கொழும்பு - கோட்டை பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின்போது காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது.

அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மூன்று பெண்களும் அடங்குவர்.

மேலும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு, நேற்று கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் பற்றி பேசிக்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மீது அவருக்குள் ஒரு ஈர்ப்பு இருப்பது எனக்குத் தெரியும். அதனால் இப்போது அவர் என்ன மனநிலையில் இருக்கின்றார் என்பதை அறியும் ஆவல் எனக்கு.

ஆனால் அவரோ, ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார்.

'மக்களால் நேசிக்கப்பட்ட, அல்லது நாயகர்களாக துதிக்கப்பட்டவர்கள் தமது இருப்புக்கு ஆபத்து வருகின்றபோது, தமது மக்களையே சுட்டுக்கொல்லவும் தயங்கமாட்டார்கள் என்பதில் எமக்கு நல்ல அனுபவம் இருக்கின்றது.

இப்போது பார்த்தீர்களா, வரலாற்று நாயகர்கள் என்று எந்த மக்கள் கோட்டபாய ராஜபக்ஷவையும், ஏன் ராஜபக்ஷ குடும்பத்தையே கருதிக்கொண்டு அவர்களை தலையில் வைத்து கொண்டாடினார்களோ, அந்த மக்களை நோக்கியே துப்பாக்கிப்பிரயோகம் செய்யுங்கள் என்று அவர்கள் இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்' என்றார்.

உண்மைதான், தமக்கு ஆபத்து என்றதும், படையினரை மக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்த அனுமதித்திருப்பது அவர்களின் இயலாமையைத்தான் வெளிப்படுத்துகின்றது.

ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடப்போவதாக போராட்டக்காரர்கள் அறிவித்தபோதே, முழுப்பலத்தையும் பாவித்து தடுக்க நினைத்தாலும், ஒரு கட்டத்தில் அது கட்டுப்படுத்த முடியாமல் போகலாம் என்பதும், அவ்வாறு தடுக்கவேண்டும் எனில் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொள்ள வேண்டிவரும் என்பதும் தெரிந்ததுதான். அவ்வாறு நடந்தால் அது இன்னமும் நாட்டில் நெருக்கடியை தோற்றுவிக்கும் என்பது தெரிந்ததாலேயே ஜனாதிபதி முன்னதாகவே, ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியிருந்தார். இந்தச் செய்தியை நேற்றைய ஈழநாடு செய்தியாகவும் தந்திருந்தது. நேற்றுமுன்தினமே அவர் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியிருந்தார். இப்போது ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களின் வசமாகியிருக்கின்றது.

இப்போது ஜனாதிபதியும் பதவி விலக சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் இதுகுறித்து சபாநாயகருக்கு அறிவித்திருப்பதாகவும் இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் அழைப்பின் பேரில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவிவிலகுமாறு சர்வகட்சி தலைவர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்திருக்கின்றபோதிலும் தான் பதவி விலகப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

அவர் பதவி விலக மறுத்தால், பதவி விலகிய ஜனாதிபதியின் இடத்திற்கு அவரே தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்படவேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றம் ஒரு ஜனாதிபதியை தெரிவுசெய்யவேண்டியிருக்கும். ஒரு மாத காலத்தில் இது நடக்கும்வரை அவர் ஜனாதிபதியாக பதவியில் இருப்பார். பாராளுமன்றத்தில் இப்போதும் பொதுஜன முன்னணியே பலம்வாய்ந்ததாக இருப்பதால், அவர்களின் உதவியுடன் ரணிலே ஜனாதிபதியாகவும் தொடரவும் வாய்ப்பு ஏற்படலாம்.

ராஜபக்ஷக்கள் தமக்கு பாதுகாப்பான ஒருவர் தற்காலிக ஜனாதிபதியாக வருவதையே விரும்புவார்கள் என்பதும் இரகசியமானதல்ல.

ஏற்கனவே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கின்ற முயற்சியில் நாற்பத்தி மூன்றாவது படையணி என்ற பெயரில் இயங்கிக்கொண்டிருக்கும் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவும் தீவிரமாக முயன்றுகொண்டிருந்தார்.

ஒவ்வொரு கட்சிகளாக சந்தித்துவந்த அவர் தனது திட்டத்திற்கு ஆதரவாக நூற்றி பதின்மூன்று எம்பிக்களின் ஆதரவைப் பெறுவதற்காக முயன்றுகொண்டிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்திருந்தது.

கடைசியாக அவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரைச் சந்தித்து தனது திட்டத்திற்கு ஆதரவு கோரியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனவே பாராளுமன்றில் நூற்றி பதின்மூன்று எம்.பி.க்களின் ஆதரவுடன் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று நம்பலாம். இதற்கு சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் கட்சி என்ன செய்யப்போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.!

இன்றைய அரசியல் நிலைமையில் எதுவும் எந்த நேரத்திலும் நடக்கலாம். இப்படித்தான் நடக்கும் என்பதை கணிப்பிடுவதும் கடினமானதுதான்.!

- ஊர்க்குருவி





## ஜனாதிபதி, பிரதமரை பதவி விலக கோரி யாழ்ப்பாணத்திலும் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை. 10

ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலகக் கோரி யாழ்ப்பாணத்தில் சைக்கிள் பேரணி ஒன்று நேற்று இடம்பெற்றது.

அத்துடன் யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கி நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சைக்கிள் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பேரணி பங்கேற்றவர்கள் யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக சென்று அங்கு கூடி கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

நேற்று நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகளால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதற்கு வலு சேர்க்கும் முகமாக யாழ்ப்பாணத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-03)

## மக்களின் போராட்டத்தில் இணைந்த படைச் சிப்பாய்



கொழும்பு, ஜூலை. 10

கொழும்பில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் பாரிய போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு நடந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

இந்நிலையியில், போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இராணுவ சிப்பாய் ஒருவரும் போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டார். (அ)

## கோட்டாபய, ரணில் பதவி துறக்க வலியுறுத்தி கிழக்கு பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு,ஜூலை. 10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லக் கோரி மட்டக்களப்பில் கிழக்கு பல்கலைக்கழக மாணவரினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது.

நேற்று முன் தினம் மாலை மட்டக்களப்பு பிள்ளையாரடியிலிருந்து இருந்து நடைபவனியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

கைகளில் நெருப்பு பந்தங்களை ஏந்தியவாறு பேரணியாக வந்தவர்கள் பொலிஸ் சுற்றுவட்டத்தில் தமது எதிர்ப்புகளை தெரிவிக்கும் வகையில் கோசங்களை எழுப்பினர்.

(அ)





## கோப்பாயில் 102 லீற்றர் டீசலை பதுக்கி விற்ற ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜூலை. 10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி பகுதியில் டீசலை விற்பனை செய்தமை மற்றும் டீசலை பதுக்கி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் கோப்பாய் பொலிஸார் ஒருவரை கைது செய்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி பகுதியில் டீசலை விற்பனை செய்வதாக கோப்பாய் பொலிஸ் விசேட படையணியினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விற்பனை செய்ய முற்பட்ட ஒரு லீற்றர் டீசலை கைப்பற்றினர்.

இதனை அடுத்து குறித்த டீசலை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த 47 வயதான ஒருவரை கைது செய்ததோடு குறித்த நபரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 102 லீற்றர் டீசலும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. (அ)

# வீண் கலந்துரையாடல் வேண்டாம்: ஜனாதிபதி, பிரதமர் விலகவேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 10

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடல்களில், கலந்துகொள்வதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொதடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் கோட்டாபய ராஜபக்ஷவும், மக்கள் ஆணை இல்லாத தற்போதைய பிரதமரும் என இருவருமே பதவி விலகி வீட்டுக்கு செல்லவேண்டும் என்றே ஒட்டுமொத்த நாட்டு மக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றபடியால், தற்போது சட்டவிரோதமாக பிரதமராக பதவி வகித்து வரும் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ள கலந்துரையாடல்களில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பதுங்கியிருந்த ராஜபக்ஷக்கள் மீண்டும் அரசியல் களத்துக்கு கொண்டுவரப்பட்டு பாதுகாப்பளிக்கப்பட்டதும், இப்போராட்டத்திற்கு துரோகம் இழைத்தவரும் தற்போதைய பிரதமர் ஆவார் என்பதுடன் இந்த நெருக்கடியில் அவரும் பிரதிவாதி என்பதை குறிப்பிடவேண்டும்.

தன்னிச்சையான, அடக்குமுறையான, ஜனநாயக விரோத அரசாங்கத்தின் முடிவு இப்போது கண்ணுக்குத் தென்பட்ட வண்ணமுள்ள வேளையில் குதிரை ஓடிய பிறகு தொழுவத்தை மூடுவது போன்ற வெற்று கலந்துரையாடல்களில் நாங்கள் பங்கேற்கப்போவதில்லை.



எமது அபிமானம் மிக்க தாய்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரே இலக்கில் இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒன்றுபட்டிருக்கும் தருணத்தில் அந்த வெற்றியின் இலக்கு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் நிலையில் போலியான பிரதமரால் அழைக்கப்படும் மற்றொரு வீண் கலந்துரையாடலால் இன்னுமொரு சுற்று ராஜபக்ஷக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுதான் நடக்கும். இத்தகைய நிலையற்ற தீர்வுகளிலிருந்து விடுபட்டு முழு அரசாங்கமும் பதவி விலகவேண்டும்.

கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்தின் பாதுகாவலர்களுடனும், வாயில் காப்பாளர்களுடனும் நாட்டின் எதிர்காலம் குறித்து கலந்துரையாட நாங்கள் விரும்பவில்லை என்பதோடு, மக்கள் போராட்டத்துடன் முன்நின்ற அனைத்து தரப்புகளுடன் இணைந்து இந்நாட்டைக் கட்டியெழுப்ப பங்களிப்போம் - என்று கூறியுள்ளார். (அ)

# சமையல் எரிவாயுவும் அத்தியாவசிய பொருள்!

கொழும்பு, ஜூலை. 10

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தொடராக எரிவாயவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் சமையல் எரிவாயுவை அத்தியாவசியப் பொருளாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது என தாம் கருதுவதாகவும், நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஆலோசனையின் பின்னர் உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.(அ)

# விமான நிலையம் முன்னால் நேற்று மாலை பெரும் பதற்றம்

கொழும்பு, ஜூலை. 10

கட்டுநாயக்க விமான நிலையத்தை சுற்றி நேற்று மாலை முதல் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

அங்கு ஏராளமான ஆர்ப்பாட்டக்காரர்கள் குவிந்தனர்.

ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் விமான நிலையம் ஊடாகச் செல்ல இடமளிக்க மாட்டோம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயினும், இந்த நிலைமையை கட்டுப்படுத்த இராணுவத்தினர் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டனர்.

விமான நிலையத்துக்குள் நுழைந்த ஒவ்வொரு வாகனமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (அ)

# யாழ்ப்பாணம்-கிளிநொச்சி இடையே விசேட ரயில் சேவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை. 10

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே விசேட ரயில் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு தினமும் பயணிக்கும் அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கான விசேட புகையிரத சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கவனத்துக்கு எடுத்துச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சேவையை ஆரம்பிப்பதற்கான இணக்கத்தை அமைச்சரவை மட்டத்திலும் ஏற்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து, கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த ரயில் திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் செனவிரத்ன யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ரயில் நிலைய அதிபர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன், மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் ஸ்ரீமோகனன் ஆகியோரை சந்தித்து ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்படி, நாளை திங்கட்கிழமை முதல் இந்த விசேட ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ரயில் திணைக்களம் அறிவுத்துள்ளது.

இதேவேளை, நாளை முதல் ஆரம்பிக்கவிருக்கும் விசேட ரயில் சேவைக்கான நேரடி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 6 காலை மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், 6.40 மணிக்கு யாழ். ரயில் நிலையத்திலிருந்தும், 7 மணிக்கு சாவகச்சேரியிலிருந்தும், 7.12 மணிக்கு கொடிகாமத்திலிருந்தும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கும், கிளிநொச்சியை 7.56 மணிக்கும், அறிவியல்நகர் ரயில் நிலையத்தை 8.05 மணிக்கும் வந்தடைந்து 8.11 மணிக்கு முறிகண்டியை அடையும்.

காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில், மாவிட்டபுரத்திலிருந்து காலை 6.05 மணிக்கும், தெல்லிப்பளையிலிருந்து 6.09 மணிக்கும், மல்லாகத்திலிருந்து 6.14 மணிக்கும், சுன்னாகத்திலிருந்து 6.18, இணுவிலிருந்து 6.22 மணிக்கும், கோண்டாவிலிருந்து 6.27 மணிக்கும், கொக்குவிலிருந்து 6.31 மணிக்கும் புறப்பட்டு 6.35 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே, புங்கன்குளம் 6.44, நாவற்குழி 6.50, தனங்கிளப்பு 6.54, சாவகச்சேரி 7.00, சங்கத்தானை 7.03, மீசாலை 7.07, கொடிகாமம் 7.12, மிருசுவில் 7.14, எழுதுமட்டுவாள் 7.21 மணிக்கு புறப்பட்டு பளையை 7.30 மணிக்கு வந்தடையும். அங்கிருந்த ஆனையிறவு 7.42, பரந்தன் 7.50 மணிக்கு வந்தடைந்து கிளிநொச்சிக்கு 7.56 மணிக்கு வந்தடையும்.

மீண்டும், காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்த ரயில்பளையிலிருந்து 10.31 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 10.48 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 11 மணிக்கும் புறப்பட்டு 11.20 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், யாழ்ப்பாணத்திலிருந்து 2.39 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 2.59 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 3.11 மணிக்கும் புறப்பட்டு, பளையை 3.38 மணிக்கும், கிளிநொச்சியை 3.56 மணிக்கும் வந்தடைந்து, முறிகண்டியை 4.10 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் முறிகண்டியிலிருந்து 4.40 மணிக்கு புறப்படும் இந்தப் ரயில் அறிவியல்நகரை 4.46 மணிக்கு வந்தடைந்து, கிளிநொச்சியிலிருந்து 5 மணிக்கு புறப்பட்டு, பரந்தனிலிருந்து 5.06 மணிக்கும், பளையிலிருந்து 5.30 மணிக்கும் புறப்பட்டு 6.44 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து 7.20 மணிக்கு காங்கேசனை அடையும். (அ)

# வீரமாகாளியம்மன் தங்க ரதத் திருவிழா





படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை. 10

யாழ்ப்பாணம், வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தங்கரத திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

அதன் முன்னதாக புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்ட புதிய தங்கரதம் வெள்ளோட்டம் இடம்பெற்றது.

இந்த தங்கரதத்தை ஈழத்து சிறப்பு ஸ்தபதியான கலைவாணி சிற்பக்கூடத்தின் முதன்மைச் சிற்பியான சிற்பவாரிதி கு. சந்திரதாசனின் தலைமையில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட ஸ்தபதிகள் குழாம் நேர்த்தியாக அமைத்திருந்தது.

திருப்பதி வெங்கடாசலபதியின் தங்கரதத்தின் வடிவமைப்பை ஒத்ததாகவும் ஈழத்தில் இருக்கின்ற கோயில்களின் தங்கரதங்களிலும் பார்க்கப் பெரிய தங்கரதமாகவும் இது அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளோட்டத்தை தொடர்ந்து புதிய தங்கரதத்தில் அம்பாளின் திருவீதி வலம் இடம்பெற்றது. (அ)

# கட்சித் தலைவர்களால் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கத் தயார்

## ஜனாதிபதி கோட்டபாய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 10

பிரதமரால் கூட்டப்படும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் மதிப்பளிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இதனை பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. முன்னதாக, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில்



கலந்துரையாடி விரைவான தீர்மானத்தை எடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்.

அத்துடன் பாராளுமன்றத்தை கூட்டுமாறு, அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

கோட்டாபயவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த நிலையிலேயே பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியது. (அ)




# 2 கப்பல்களில் அவசரமாக தப்பி ஓடிய நபர்கள் யார்?

கொழும்பு, ஜூலை. 10

கடற்படைக்கு சொந்தமான சித்துரல, கஜபாகு இரு கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியேறிச் சென்றுள்ளதாக ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த கப்பல்களுக்குள் சிலர் பிரவேசிக்கும் காட்சிகள் அங்கிருந்த நபரொருவரின் கையடக்கத் தொலைபேசியில் பதிவாகியுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த கப்பல்களில் பயணித்தவர்கள் தொடர்பில் தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை என துறைமுக பொறுப்பதிகாரியைச் சுட்டிக்காட்டி குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அதிசொகுசு வாகனங்கள் கட்டுநாயக்க நோக்கி அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் அதில் பயணித்த பிரபலங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை. (அ)

# போராட்டக்காரருடன் அதிரடியாக கைகோர்த்தார் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஜூலை. 10

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸார் ஒருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு போராட்டத்தில் இணைந்துக்கொண்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரி பொலிஸ் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது, குறித்த மோட்டார் சைக்கிளை வீதிக்கு அருகாமையில் நிறுத்திவிட்டு, தலைக்கவசத்தை கழற்றி வீதியில் வீசிவிட்டு, "அரகலயட்ட ஜயவேவா" (போராட்டத்துக்கு வெற்றி) எனக் கோஷமெழுப்பி, ஆர்ப்பாட்டத்துடன் கைகோர்த்துக்கொண்டார்.



மஹரகமவில் வைத்தே, போராட்டக்காரர்களுடன் குறித்த பொலிஸ் அதிகாரி இணைந்துக்கொண்டுள்ளார்.

பொலிஸ் மோட்டார் சைக்கிள் அவ்விடத்திலேயே நிற்கிறது. தலைக்கவசம் கீழே விழுந்து கிடந்தது.

பொலிஸ் அதிகாரியோ, போராட்டக்காரர்களுடன் கைகோர்த்து கொழும்பை நோக்கி சென்றார். (அ)

# 1 லீற்றர் டீசல் 2,500 ரூபாய்க்கு விற்பனை செய்த நபர் கைது!

கொழும்பு, ஜூலை. 10

வவுனியாவில் 2,500 ரூபாய் படி 40 லீற்றர் டீசல் எரிபொருளை விற்பனை செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் 2,500 ரூபாய் படி 40 லீற்றர் டீசலை விற்பனை செய்தமையை கண்டு பிடித்தனர்.

இதனை அடுத்து குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவரது வீட்டிலும் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் வசித்து வந்த 31 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# மரண அறிவித்தல்

## அதிஸ்டபாலன் நிமல்ராஜ்



**தோற்றம்** 07 - 08 - 1973 **மறைவு** 05 - 07 - 2022

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Wembley ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அதிஸ்டபாலன் நிமல்ராஜ் கடந்த 05-07-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், வைரமுத்து கனகாம்பிகை தம்பதிகள், சபாரட்ணம் தங்கமணி தம்பதிகளின் அன்புப் பேரனும்,அதிஸ்டபாலன் விமலாதேவி தம்பதிகளின் பாசமிகு மகனும், பாலசுந்தரம் விஜயலஷ்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,கிருஷ்ணவேணி அவர்களின் பாசமிகு கணவரும்,துஜாஜினி, கிறிஸ்சா ஆகியோரின் அன்புத் தந்தையும்,அருள்ராஜா(இலங்கை), மதன் ராஜ்(லண்டன்), கீதா(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கமலதாசன்(அவுஸ்திரேலியா), பாமினி (இலங்கை), பிருந்தா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற ரவிசந்திரன், சிறிதரன் (கனடா), ரேணுகா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற தேவி, சாந்தினி(கனடா), ஜோனி(லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்,விதாஜினி, லதாஜினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,

சர்யூன், ஜதுனன், லதுஷன், கிருத்திக், நேகன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும்,தர்சன், சிந்து, லோஜினி, டானியல், நரேஸ், சயினா, திலோஷனா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

*கிரியை :*
Sunday, 10 Jul 2022 9:30 AM - 11:30 AM
Barnet Multicultural Community Centre Algernon Road, Hendon, London NW4 3TA
*தகனம்*
Sunday, 10 Jul 2022 12:00 PM
Hendon crematorium Holders Hill Rd, London NW7 1ND, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| **மதன் - சகோதரன்** | Mobile : +447931910479 Phone : +447940300646 |
| **சிறி சாந்தி - மைத்துனி** | Mobile : +19059560748 |
| **ராஜா - மைத்துனர்** | Mobile : +94771154007 |
| **கமலதாசன் - மைத்துனர்** | Mobile : +61405540787 |
| **கிருஷ்ணவேணி - மனைவி** | Mobile : +447825604538 |

தகவல்:
**மதன் - சகோதரன்**

# மட்டு. போதனா வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு, ஜூலை. 10

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஊழியர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்றைய பொருளாதார நெருடிக்கடி உட்பட நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி நாட்டை கொண்டுசெல்பவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய ஊழியர்களால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதிக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு வைத்தியசாலையின் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
10.07.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 730 1370**

# ராஜபக்ஷ சகாப்தம்?

சில ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்ற காட்சிகளை, இப்போது இலங்கைத் தீவில் காண்கின்றோம். நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் – நான்தான் நீங்கள் தேடிய தலைவன் என்று எக்காளமிட்ட கோட்டபாய ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் கைப்பற்றியிருக்கின்றனர். இந்த தலையங்கத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது, ஜனாதிபதி மாளிகையின் படுக்கையறை, நீச்சல் தடாகம் ஆகியவற்றை போராட்டக்காரர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் புகைப்பட்டங்கள் சர்வதேச ஊடகங்களில் பிரதான இடத்தை பிடித்திருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதுங்கு குழிகள் மற்றும் அங்குள்ள வசதிகளை சிங்கள மக்களுக்கு காட்சிப்படுத்தி, தங்களின் அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்ள முற்பட்டவர்கள், இப்போது ஆர்பாட்டக்காரர்களுக்கு அஞ்சி, மறைந்து ஓடும் காட்சிகளை அதே சிங்கள மக்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதிகாரத்தின் உச்சத்திலிருக்கும் போது, தங்களது அதிகாரத்தின் எல்லைகள் தெரியாமல் மமதை கொள்பவர்கள் பலரது நிலைமை இப்படித்தான் முடிந்திருக்கின்றது. அது இப்போது ராஜபக்ஷக்களுக்கும் நடந்திருக்கின்றது.

நாட்டை முன்நோக்கி வழிநடத்துவதற்கான எந்தவொரு உருப்படியான திட்டங்களையும் கொண்டிருக்காமல், வெறுமனே, சிங்கள இனவாதத்தின் மூலம் நீண்ட காலத்திற்கு ஆட்சியிலிருப்பதற்கான கனவையே ராஜபக்ஷக்கள் கொண்டிருந்தனர். மகிந்த விதைத்த இனவாதத்தை, கோட்டபாய ராஜபக்ஷ அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல முற்பட்டார். ஆனால் அடிப்படையில் மகிந்த எதைச் செய்தாரோ அதனையே கோட்டபாய ராஜபக்சவும் செய்தார். நாட்டின் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்டத்தில், 70 விகித்திற்கு மேற்பட்ட தொகையை அவரது குடும்ப உறுப்பினர்கள் பிரதிநித்துவம் செய்த அமைச்சுக்களும், அரச நிறுவனங்களாலுமே கட்டுப்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்த சிறிலங்காவே, ராஜபக்ஷ குடும்பத்தினுடையது போன்றே காட்சியளித்தது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள், மறுபுறமாக, அரசர்கள் போன்றே செயற்பட்டனர். இதன் விளைவாக, ஆதரித்த மக்களே, இப்போது வெறுத்து துரத்துகின்றனர்.

ஜனநாயக அரசியல் என்பது மக்களுக்கு பொறுப்புச் சொல்லும் ஓர் அரசியலாகும். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் ஏனைய இனங்கள் தொடர்பிலிருக்கும் அச்சங்களை, ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளர்களும் தங்களின் அதிகார பசியை போக்குவதற்காக பயன்படுத்திக் கொண்டனர். ராஜபக்ஷக்கள் இதனை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றனர். இதன் எல்லாக் காலத்திலும் தங்களது அரசியல் சீவியத்தை தக்கவைக்க முடியுமென்பதே அவர்களது நம்பிக்கையாக இருந்தது. கோட்டபாய ராஜபக்ஷ 69 லட்சம் மக்களின் ஆதரவில் வெற்றிபெற்றதை தொடர்ந்து, சிங்கள பௌத்தத்தின் காவலனாக தன்னை முன்னிறுத்திக் கொண்டால், தொடர்ந்தும் ஆடசியிருக்கலாம் என்பதே கோட்டபாயவின் அரசியல் கணக்காக இருந்தது. இப்போது அவமானகரமான தோல்வியை சந்தித்திருக்கின்றார். இதில் ரணில் விக்கிரமசிங்கவும் தோல்வியடைந்திருக்கின்றார். ஆனால் ஓர் ஆசனத்தில் பிரதமரானவர் என்னும் வகையில் அவரை பொறுத்தவரையில் இது பெரிய தோல்வியல்ல. ஏனெனில் அவர் ஏற்கனவே தோல்விடைந்திருந்த ஒருவர்தான்.

அதிகார மமதையில் தலை கால் புரியாமல் செயற்படும் ஆட்சியாளர்கள் அனைவருக்கும் இது ஒரு படிப்பினை. அதே வேளை, மக்கள் எழுச்சி கொண்டால், அதிகாரத்திலிருப்பவர்கள் அடங்கித்தானாக வேண்டும் என்பதற்கும் இது ஒரு நல்ல உதாரணமாகும். ஜனாதிபதி செயலகம் போராட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டதை தொடர்ந்து ராஜபக்ஷ சகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ராஜபக்ஷக்கள் தந்திரங்கள் செய்யும் காலமும் முடிந்துவிட்டது. இனி எத்தகைய தந்திரங்கள் செய்தாலும் பயனில்லை. அதே வேளை, மக்களதிகாரத்தை கையிலெடுக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் உத்வேகம் பெற்றிருக்கின்றனர். இது குறிப்பிட்ட காலத்திற்கு சிறிலங்காவின் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கையுணர்வை கொடுத்துக் கொண்டிருக்கலாம்.



# மனிதநேய அநாதைகளாக ஈழத்தில் மனிதாபிமான நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும் தமிழர்கள்!

மருத்துவர் சி. யமுனாநந்தா

*தமிழ்மக்கள் வாழ்வியலில் ஏற்பட்ட மனிதாபிமான நெருக்கடிநிலைகள் பலவற்றை நாம் எமது அனுபவம் வாயிலாகக் கண்டுள்ளோம். சமூக மட்டத்தில் ஏற்பட்ட பாரிய நெருக்கீடுகளை எவ்வாறு நாம் முகம் கொடுக்கிறோம் என்பதனை சமூக அறிவியல் நோக்கில் நாம் அணுகுதல் அவசியம். காலத்திற்குக் காலம் எமக்கு ஏற்பட்ட மனிதாபிமான நெருக்கடி நிலைகளுக்கு எமது சமூகத்திற்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிலைகள் :*

*1980 - 1985 - அகதிகள்*
*1985 - 1990 - ஏதிலிகள்*
*1990 - 1995 - புலம்பெயர்ந்தோர்*
*1995 - 2010 - உள்ளக இடம்பெயர்ந்தோர்*

*சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பிரயோகமும், மனிதநேய உதவியும் மேற்கூறியபடி நான்கு வரைவிலக்கணங்களால் கட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பாக உள்ளக இடப்பெயர்வு என்ற வரைவிலக்கணத்தில் யாழ்ப்பாண இடப்பெயர்வு, வன்னிப் பேரவலம் என்பன ஒரு நாட்டின் உள்விவகாரம் என்ற வகையில் கையாளப்பட்டன. இதனால் ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான நிவாரணப்பணி மட்டுப்படுத்தப்பட்டது.*

*தற்போதைய எமது மக்கள் முகம் கொள்ளும் மனிதநேய இடர்நிலையினை மனிதநேய அநாதைகள்* (Humanitarian Orphans) *என்று கூறலாம். அதாவது எமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மருத்துவ வசதிகள் அற்றுச் செல்கின்றது. போக்குவரத்து இடர்மிக்கதாக மாறிவிட்டது.*

*அகதிகள், ஏதிலிகள், புலம்பெயர்ந்தோர், உள்ளக இடம்பெயர்ந்தோர் போல் மனிதநேய அநாதை நிலைக்கும் இடர்மீட்புத் திட்டமிடல் அவசியமானது. இதனை ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான செயலகம் உட்பட மனிதநேய அமைப்புக்கள் கருத்தில் எடுத்தல் அவசியம்.*

*மனிதநேய அநாதை நிலையில் உள்ள சமூகத்தினைத் தொடர்ந்து பாதிக்காது இருப்பதற்கு இன்றைய சூழலில் இந்திய அரசின் நேரடி நிவாரணப்பணி இன்றியமையாதது. குறிப்பாக இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் எரிபொருட்கள், உணவுப்பொருட்கள், மருந்துகள் என்பவற்றை ஒரு வருடத்திற்கு இந்திய அரசு நேரடியாக தற்போதைய மனிதாபிமான நெருக்கடி நிலையில் உதவினால் நாம் தற்போதைய மனிதநேய அநாதை நிலையைத் தாண்டலாம். மேலும் சமூகத்தில் வன்முறைகளற்ற அமைதியினையும் நிலைநாட்டலாம்.*

*இடப்பெயர்வு, புலம்பெயர்வு, அகதிகள் என்ற வகையில் இந்தியாவிற்கும் வேறு நாடுகளிற்கும் தற்போதைய நிலையில் மக்கள் வெளியேறாது தாய் நாட்டிலேயே வாழ்வதற்கு வேற்று அரசு நேரடி நிவாரணங்களை மேற்கொள்ளல் மனிதநேய அநாதை இடர்திட்டமாக அமையும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -37

# வீழ்ச்சியின் விளிம்பை நோக்கியா நாடும் மக்களும்?

**கணபதி சர்வானந்தா**

எதனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்? எவராலும் விடை சொல்ல முடியாததொரு கேள்வி இது? பயங்கரமானதொரு சிக்கலில் சிக்கிப் போய்த் தவிக்கும் நாடும் மக்களும். சிக்கலை எப்படி சிக்கெடுக்கப் போகிறோம்? அதற்காகத்தானே இந்தப் போராட்டம் என்கின்றனர் போராட்டகாரர்கள்.

கிடைக்கும் அனைத்து வாய்ப்புக்ளையும் பயன்படுத்தி... தமது நச்சுக்கரங்களை எல்லா இடங்களிலும் நீட்டிக் கடன் பெற்று.. அனைத்து வழிகளிலும் நாட்டைக் கொள்ளை அடித்து... நாட்டைக் கீழ் நோக்கித் தள்ளி வீழ்த்திய தலைவர்களை நோக்கி... “இனிச் செய்வதற்கு ஒன்றும் இல்லை. இருக்கையை விட்டுச் சென்றுவிடுங்கள். அதுவே போதும் என்று” சொல்லத் தொடங்கியிருக்கும் மக்கள், அவர்களுக்குக் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டும் ஆட்சியாளர்கள்.. அடம்பிடிக்கின்ற அவர்களை அகற்றவே இந்தப் போராட்டம் என்ற வாறு விடாப்பிடியாகப் போராடுகிறார்கள் மக்கள்.

இவர்கள் இப்போது யாரை அகற்றத் துடிக்கிறார்களோ? யாரை வேண்டாம் என்று போராடுகிறார்களோ? யாரைத் திட்டித் தூஷிக்கிறார்களோ? அவரே ஒரு தருணத்தில் இவர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவராக் காட்சி தந்தவர். இவர்கள் தமது இரு கண்கள் என்று போற்றும் பௌத்தத்தையும், சிங்களத்தையும் காக்கவல்லவர் என்று அவரைப் பரிபூரணமாக நம்பியவர்கள். அந்த நம்பிக்கையினாலேயே கண்மூடிக் கொண்டு ஆட்சி பீடத்தை அவரிடம் ஒப்படைத்தனர். ஆனால் அவரது ஆட்சிக்காலத்தேயே அவரால் இவர்கள் வஞ்சிக்கப்படுவதைப் பார்ப்பது வேடிக்கையாக இருக்கிறது. இப்போது, சிங்களமும் இவரை வேண்டாம் என்கிறது. பௌத்தமும் இவரைக் காலால் உதைக்கிறது. இவரை ஒரு போலி வீரர் என்று பரிகசிக்கிறது.

எனவே சிறுபான்மை இனத்தவர் இந்தக் காலங்களையும் அதன் பதிவுகளையும் எப்படி அணுகவேண்டும்? அவற்றை ஆழமாகப் பார்பதன் அவசியந்தான் என்ன? அந்த விடயங்களை இந்தப் பகிர்வில் வலியுறுத்துவதே பதிவின் நோக்கமாகும்.

இந்தப் போராட்டத்தில் நாம் பார்வையாளர்களா? பங்காளர்களா? என்ற விடயம் பலருக்குப் புரியவில்லை. நாம் கடந்து வந்த பாதையில் கண்டவற்றையும் அனுபவித்தவைகளையும் மீள அறிந்து.. சீர் தூக்கிப் பார்த்து... அவற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையிலேயே இந்தப் போராட்டத்தையும் பார்க்க வேண்டுமா? அல்லது அது பற்றிச் சிந்திப்பதன் அவசியத்தை உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்ற கேள்விகளின் அடிப்படையில் சிந்திப்பதன் முக்கியத்தை நாம் உணர வேண்டும். அதுவே மிகவும் முக்கியம் எனக் கருதத் தோன்றுவதாகக் குறிப்பிடுகிறார் ஒரு ஆய்வாளர்.

இந்தப் போராட்டம் எங்கிருந்து தொடங்கப்பட்டது? யாரால் தொடங்கப்பட்டது? ஏன் தொடங்கப்பட்டது? இந்தப் போராட்டத்தில் வலியுறுதப்படும் விடயம் என்ன? இந்தப் போராட்டத்தில் போராடுபவர்கள் கேட்டுக் கொண்டதைப் போலத் தீர்வு கிடைத்துவிட்டால் என்ன நடக்கும்? அதற்குப் பின்னால் வரப்போகும் அரசியல் எப்படி இருக்கும்? அதில் மக்கள் சுதந்திரம், சுய நிர்ணய உரிமைகள் எவ்வாறு பேணப்படும்? அதில் சிறுபான்மையினரின் நிலை என்னவாகும்?

இது போன்ற பல விடயங்களை ஆய்ந்தறிந்த பின்னர் அந்தப் போராட்டதில் கலந்து கொள்வதில் அர்த்தம் உண்டு. இல்லாவிடில் தடியைக் கொடுத்து அடியைப் பெற்றுக் கொள்வது என்ற நிலைமையே காணப்படலாம் என்கிறார் அந்த ஆய்வறிஞர்.

இது முன்னெச்சரிகை அல்ல.ஒரு விழிப்புணர்வு. இதனை ஒரு முற்காப்பு நடவடிக்கை என்று சொல்லலாம். தற்காப்பாகவும் எண்ணிக் கொள்ளலாம். எனவே இதனைத் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பது என்று சொல்ல முடியாது. “பல முறை வீழ்ந்து களைத்துப்போனவன் இப்படித்தான் சிந்திப்பான். பட்டறிவாகத்தான் இதனைப் பார்ப்பான். அவன் பயந்து ஒதுங்குகிறான்.” என எண்ணுவது தவறு என்றே நான் கருதுகிறேன்.

கடந்த கால அரசியல் பேரங்களிலே பேரினவாத அரசியல் தலைவர்கள் நல்ல வியாபாரிகளாக இருந்திருக்கின்றனர். ஒன்றை முன் காட்டி இன்னொன்றை விற்பதிலே திறமையுள்ளவர்களாக அவர்கள் காணப்பட்டனர். அந்தத் திறமையை அறம் என நான் போற்ற மாட்டேன். அதனை ஒரு ஏமாற்று வித்தையாகவே நான் பார்க்க முனைகிறேன். அவர்கள் மட்டுமல்ல எம்மவர்களும் அவர்களிடம் ஏமாந்து போனதற்குக் காரணம் அவர்களும் அரசியலில் அறம் அற்றவர்களாகவே காணப்பட்டனர்.

வரப்போகிறவர் பொருத்தமற்றவர் என ஜனாதிபதித் தேர்தலில் சுட்டிக்காட்டி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம். காலம் கடந்து, பெற்றுக்கொண்ட பல இழப்புகளுக்குப் பின்னால் இன்றைய போராட்டகாரர்கள் அதனை உணர்ந்திருக்கிறார்கள். இதனையும் ஒரு காலம் கடந்ததொரு விடயம் என்று அவர்கள் உணருவார்கள். எப்போது? போராட்டத்துக்குப் பின்னால் ஏற்படக் கூடிய மாற்றம் என்பது .. ஒரு சர்வதேச நெருக்கடியாக மாறும்போது.. ஒரு சர்வதேச அழுத்தமாக விஷ்வரூபம் எடுத்து நாட்டையும் மக்களையும் காவு கொள்ளும்போது... வளங்கள் சுரட்டப்படும்போது..

எனவே தற்காலிக அரசியல் சர்ச்சைகளுக்குள்ளும் அது சார்ந்த நெருக்கடிகளுக்குள்ளும் எம்மை உட்படுத்துக் கொள்ளாது, தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடிகளை எண்ணிப் பயப்படாது, எமக்குரிய அரசிலையும் சுய பொருளாதரச் சிந்தனையையும் கண்டறிவதே காலத்தின் கட்டாயம். மாற்றங்கள் பற்றி உடன் சிந்திக்க வேண்டிய அவசியத்தைக் காலம் கற்றுத் தந்திருக்கிறது. மாற்றங்களைத் தற்காலிகமாக ஏற்படுத்துவோம். காலப்போக்கில் அவற்றின் பயனறிந்து ஸ்திரமுள்ளவைகளாக அவற்றை மாற்றிக் கொள்ளலாம். எனவே சமூகத்தை ஒரு இயங்கு நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். சமூக இயக்கத்தைத் தக்க வைப்பதேயே இன்றைய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

அரசியாலகட்டும், பொருளாதாரமாகவும் இருக்கட்டும், தற்காலிக மாற்றங்களுக்காகப் போராடுவதைத் தவிர்த்து நிரந்தரமான தீர்வுக்காகத் திட்டங்களை வகுப்பவர்களாகப் பயணத்தைத் தொடர்வதே காலத்தின் கட்டாயம்.

---

# இந்தவார ராசிபலன் 10.07.2022 - 16.07.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00   ராகு காலம் : 04.30 - 06.00   திதி : துவாதசி**

**ஜுலை 10 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - ஆனி 26**

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். சந்தோஷமும் சங்கடமும் நிறைந்த வாரம். நிதானம் காப்பது நன்மையாகும். செயல்களில் லாப நிலை உண்டாகும். முயற்சிகள் நிறைவேறும். வரவு அதிகரிக்கும்.உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அரசு வழியிலான முயற்சிகள் வெற்றியாகும். செயல்களில் கவனம் தேவை. அதன்பின் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்கள் செயல்கள் தடையின்றி நடந்தேறும். எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உண்டாகும். எதிர்பாராத இடையூறுகளும் செயல்களில் தடைகளும் ஏற்படும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. முயற்சிகள் வெற்றியாகும். செயல்களில் நிதானமும் அமைதியும் தேவை. எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகும். நிதானமும் அமைதியும் நன்மை தரும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உங்கள் முயற்சிகளில் தெளிவும் வேகமும் இருக்கும். செயல்களில் ஆதாய நிலை உண்டாகும். எதிர்ப்புகள் விலகும். நிதிநிலை உயரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.தடைபட்டிருந்த செயல்களை முடித்து நன்மைகளைக் காண்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அனைத்து செயல்களிலும் எச்சரிக்கை அவசியம். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் செயல்களில் இழுபறி இருக்கும். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சுப நிகழ்ச்சிக்கு நாள் குறிப்பீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்தவை நிறைவேறாமல் போகும். செயல்களில் அலைச்சல் உண்டாகும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். சொல்வாக்கிற்கு மதிப்பு உண்டாகும். பணிகள் எதிர்பார்த்தபடி வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சியில் லாபம் காண்பீர்கள். ஓய்வு சந்தோஷம் என்று மனம் விரும்பும். செயல்களில் வெற்றி அடைவதற்காக கடுமையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். துணிச்சலான உங்கள் செயல்களால் நினைத்ததை சாதிப்பீர்கள். திட்டமிட்டு செயல்படும் செயல்கள் வெற்றியாகும். எதிர்வரும் பிரச்சினைகளை சமாளித்து நினைத்ததை அடைவீர்கள். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செயல்களில் கவனம் தேவை. உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் திருமணம் குறித்த பேச்சு எழும். சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும். வரவு செலவுகளில் கவனம் தேவை. வார்த்தைகளில் நிதானம் வேண்டும். குடும்பத்தில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். நன்மைகள் அதிகரிக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் புதிய வரவு உண்டாகும். நிதி நிலை உயரும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

கவனமுடன் செயல்படுங்கள். குழப்பம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். செயல்களில் தெளிவும் வேகமும் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். போதிய அளவிற்கு வருமானம் வந்து சேரும்.கவனமுடன் செயல்பட வேண்டிய நேரம். உங்களுடைய அத்தியாவசியத் தேவைகள் நிறைவேறும். யோசித்து செயல்படுங்கள். வழக்கமான செயல்களிலும் இழுபறி இருக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதிர்பாராத செலவுகளையும் நெருக்கடிகளையும் சந்திப்பீர்கள். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். செயல்களில் சாதகமான நிலை உருவாகும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி நிறைவேறும். தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகி நிதிநிலை உயரும். அலைச்சல் வீண் செலவு என்று ஏற்படும் என்பதால் யோசித்து செயல்படவும். அதன் பின் உங்கள் முயற்சிக்கேற்ப லாபம் காண்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

செயல்களில் நன்மைகளைக் காண்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். தேவைகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள். குடும்ப வகையில் செலவுகள் அதிகரிக்கும். உங்கள் மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம் இது. முயற்சியால் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உங்கள் முயற்சிகள் நிறைவேறும். தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். வருமானம் அதிகரித்து நிதி நிலை உயரும். அலைச்சல்களும் செலவும் அதிகரிக்கும் முயற்சிகள் இழுபறியாகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. தொழிலை விரிவு செய்து லாபம் காண்பீர்கள். வீண் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கவனம் தேவை. நன்மையான வாரம் இது.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நினைத்ததை சாதிக்கும் வாரம் இது. கடந்த வாரம் இருந்த நெருக்கடிகள் விலகும். புதிய முயற்சிகள் சாதகமாகும். தொழில் லாபத்தை நோக்கி செல்லும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் சரியாகும். வேலை பளுவின் காரணமாக அலைச்சல் அதிகரிக்கும். உடல்நிலையில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி தோன்றும். பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசுவார்கள். வேலை வாய்ப்பு முயற்சி நிறைவேறும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகளில் தடுமாற்றம் உண்டாகும். முயற்சிக்கேற்ப நன்மை அடைவீர்கள். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்தி லாபத்திற்கு வழி காண்பீர்கள். நிதானத்துடன் செயல்பட வேண்டிய வாரம்.செயல்களில் நிதானம் தேவை. உங்கள் அணுகுமுறையில் மாற்றம் செய்வீர்கள். புதிய பாதையில் செல்வீர்கள். அதனால் உங்கள் செயல்கள் லாபமாகும். எதிர்பாராத சங்கடங்கள் உண்டாகலாம்.முயற்சிகளில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் செலுத்துங்கள். ஓய்வும் உறக்கமும் அவசியம்

# போரிஸ் ஜான்சன்: பிரிட்டன் பிரதமரை பதவி விலக வைத்த 5 காரணிகள்

மூன்று வருடங்களுக்கு முன்புதான் போரிஸ் ஜான்சன் கன்சர்வேடிவ் கட்சியை 1987ஆம் ஆண்டுக்கு பிறகு மிகப்பெரிய வெற்றிக்கு அழைத்து சென்றார்.

ஆனால் இப்போது பிரட்டன் பிரதமர் தனது சொந்த எம்.பிக்கள் பலரின் ஆதரவை இழந்து, கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பதவிலிருந்து விலகும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். புதிய கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை தான் பிரதமர் பதவியில் நீடிக்க உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதற்கான ஐந்து காரணங்களை இங்கே தொகுத்து வழங்குகிறோம்.



**கிறிஸ் பிஞ்சர் விவகாரம்**

ஜூன் 29ஆம் திகதியன்று முன்னாள் துணை தலைமை கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினரருமான கிறிஸ் பிஞ்சர் தனியார் கிளப் ஒன்றிற்கு சென்றுள்ளார். அவரின் கூற்றுப்படி "அவர் அளவுக்கு அதிகமாக குடித்து வெட்கப்படியான சூழலுக்கு தன்னைத்தானே அழைத்து சென்றார்."

இரண்டு ஆண்களிடம் தவறாக நடந்து கொண்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அதன்பின் பல வருடங்களுக்கு முந்தைய குற்றச்சாட்டுகளும் அடுக்கடுக்காக வெளியே வந்தன. இதனால் அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகள் பிரதமரின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

பிப்ரவரி மாதம் கிறிஸ் பிஞ்சரை துணை தலைமை கொறடாவாக நியமிக்கும்போது போரிஸ் ஜான்சனுக்கு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தெரிந்திருக்கவில்லை என பிரதமர் அலுவலகம் தெரிவித்தது. ஆனால் இது சரியான கூற்று இல்லை என்ற போதும் அமைச்சர்களும் இதை மீண்டும் வலியுறுத்தினர்.

ஜூலை 4ஆம் திகதி ஜான்சனுக்கு பிஞ்சர் மீதான அதிகாரப்பூர்வ புகார் குறித்து தெரிந்திருந்தது என பிபிசி செய்தி வெளியிட்டது. அடுத்த நாள் முன்னாள் அரசு ஊழியர் ஒருவர், போரிஸ் ஜான்சனுக்கு இந்த புகார் குறித்து நேரடியாக தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

அதன்பின் பிஞ்சர் குறித்து தனக்கு 2019ஆம் ஆண்டே தெரியும் என்றும், பிஞ்சரின் நியமனத்திற்கு தான் மன்னிப்பு கோருவதாகவும் போரிஸ் ஜான்சன் தெரிவித்தார்.

**பொதுமுடக்க விதிமீறல்கள்**

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது பிறந்தநாள் நிகழ்வில் பொதுமுடக்க விதிகளை மீறியதாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், போரிஸ் ஜான்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல கொரோனா நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுவதற்காக முதல் முறையாக பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டபோது பார்ட்டி ஒன்றுக்கு சென்றது குறித்து பின்னர் மன்னிப்பு கோரினார் போரிஸ் ஜான்சன்.

மேலும், பிரதமர் அலுவலகம் மற்றும் ஒயிட் ஹாலில் பொதுமுடக்க விதிகளை மீறியதாக 83 பேருக்கு 126 விதமான அபராதங்களை காவல்துறையினர் விதித்தனர்.

அதேபோல அரசியல் தலைவர்கள் அடுத்தடுத்த நிகழ்வுகளில் பொதுமுடக்க விதிகளை மீறியதாக அபராதங்கள் விதிக்கப்பட்டன என மூத்த அரசு ஊழியர் சூ க்ரே அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்

மூத்த அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த டிசம்பர் மாதம் பிரதமர் அலுவலகத்தில் அனைத்து விதிகளும் கடைப்பிடிக்கப்படுவதாக போரிஸ் ஜான்சன் தெரிவித்திருந்தார். இப்போது அவர் கூறியதில் உள்ள உண்மைத் தன்மை குறித்து நாடாளுமன்ற கீழவை குழுவால் அவர் விசாரிக்கப்படவுள்ளார்.



**வரி உயர்வும், வாழ்கை செலவுகளும்**

பிரிட்டனில் 2022ஆம் ஆண்டு பணவீக்கம் மேலும் அதிகரித்தது. தற்போது 9.1 சதவீத பணவீக்கம் நிலவுகிறது.

இதற்கான பல காரணங்கள் போரிஸ் ஜான்சனின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை.

எடுத்துக்காட்டாக ரஷ்யா யுக்ரேன் மீது படையெடுத்திருப்பதால் எண்ணெய் விலையும், உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தது. ஒரு லிட்டர் எரிபொருளுக்கான வரியை 5 பென்ஸ் வரை குறைத்தது. அதேபோல ஏப்ரல் மாதம் வரியை உயர்த்தியது. தேசிய காப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய தொகையை அதிகரித்தது. இதனால் பிரிட்டனின் தேசிய சுகாதார சேவை மீதான பாரம் குறையும் என அரசு தெரிவித்தது.

34 ஆயிரம் பவுண்டிற்கு மேல் சம்பாதிக்கும் ஒருவர் அதிகமாக வரி செலுத்த வேண்டும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

வாழ்க்கை செலவுகள் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி கொண்டிருக்கும் இந்த வேளையில் வரியை உயர்த்தி உழைக்கும் மக்களை மேலும் இந்த அரசு சிரமப்படுத்துகிறது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்தன.

**ஓவன் பேட்டர்சன் விவகாரம்**

2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், அப்போது கன்சர்வேடிவ் கட்சி எம்.பியாக இருந்த ஓவன் பீட்டர்சனை 30 நாட்களுக்கு பதவியிலிருந்து இடைநீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற கமிட்டி தெரிவித்திருந்தது. ஓவன் பீட்டர்சன் நிறுவனங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு அவற்றிக்கு சலுகைகளை அளிக்க முயற்சித்ததாக அந்த கமிட்டி தெரிவித்திருந்தது.

ஆனால் போரிஸ் ஜான்சன் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சியினர் அவரின் இடைநீக்கத்திற்கு எதிராக வாக்களித்தனர். அவர் மீதான விசாரணை எப்படி மேற்கொள்ளப்படுகிறது என்பதை கண்காணிக்கவும் புதிய கமிட்டி ஒன்றை நியமித்தனர். அதன்பின் பெரும் எதிர்ப்புகளுக்கு பிறகு பேட்டர்சன் பதவி விலகிறார். இந்த விவகாரத்தை தான் சரியாக கையாளவில்லை என போரிஸ் ஜான்சன் பின்னர் ஒப்புக் கொண்டார்.

**பிரெக்ஸிட் குறித்து எந்த திட்டமும் இல்லை**

பிரெக்ஸிட்டை நிகழ்த்தி காட்டுவோம் என்ற தெளிவான கொள்கையை முன்னிறுத்தி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று பிரதமரானவர் போரிஸ் ஜான்சன். ஆனால் அப்போதிலிருந்து பிரதமர் அலுவலகத்தில் பிரெக்ஸிட் குறித்த தெளிவும், திட்டங்களும் இல்லை என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

போரிஸ் ஜான்சன் தெளிவில்லாமல் செயல்படுவதாக அவரின் முன்னாள் ஆலோசகரான டோமினிக் க்யூமிங்ஸ் தொடர்ந்து விமர்சித்து வந்தார். கன்சர்வேடிவ் எம்.பியான ஜெரிமி ஹண்ட், போரிஸ் ஜான்சன் தொலை நோக்கு பார்வையும், திறனும் இல்லாமல் செயல்படுவதாக தெரிவித்தார்.

அதேபோல இடைத்தேர்தல்களில் கன்சர்வேடிவ் கட்சியினர் தொடர் தோல்வியை சந்தித்து வந்தனர். இதனால் உளவியல் ரீதியான மாற்றத்திற்கு தான் ஆளாகப் போவதில்லை என்று போரிஸ் ஜான்சன் தெரிவித்திருந்தார். இப்போது கட்சியின் தலைமை பொறுப்பிலிருந்து அவர் விலகுவதாக அறிவித்துள்ளார்.

# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தீவிரமடையும் அரசியல் குழப்பநிலை



வீரகத்தி தனபாலசிங்கம்

பதவியேற்ற நாளில் இருந்து இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து அச்சந்தரும் அறிவிப்புக்களைக் கிரமமாக செய்துவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த செவ்வாய்கிழமையும் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அண்மையில் கொழும்புக்கு வந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழுவுடன் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவுகள் குறித்து விளக்குவதே அவரின் இந்த உரையின் பிரதான நோக்கம். நாணய நிதியக் குழுவுடனான பேச்சுவார்த்தைகள் குறித்து பாராளுமன்றத்தில் பிரதமர் விபரங்களை வெளியிடவேண்டும் என்று எதிரணி கட்சிகள் ஏற்கெனவே கோரிக்கை விடுத்திருந்தன.

அன்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் சபைக்கு வந்திருந்தார். பிரதமரின் முக்கிய உரையை கேட்பதற்காக அவர் வந்தாரா அல்லது முதல் நாள் சபையில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதியை வெளியில் காணமுடியலவில்லை என்று ஏளனமாகக் குறிப்பிட்டதால் தான் பதுங்கியிருக்கவிலலை என்பதை காட்டுவதற்காக வந்தாரா என்பது தெரியவில்லை. ஜனாதிபதியின் மூத்த சகோதரர் மகிந்த ராஜபக்சவும் சபையில் பிரசன்னமாகியிருந்தார். கடுமையாக சுகவீனமுற்றிருப்பதாக தன்னைப் பற்றி வெளியாகின்ற ஊகங்களை மறுதலிக்கவேண்டிய தேவை அவருக்கு இருக்கிறது.

ஜனாதிபதி சபைக்குள் வந்தவுடன் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் " கோட்டா வீட்டுக்கு போ" என்று எழுதப்பட்ட பதாதைகளை உயர்த்திப் பிடித்து கோஷங்களை எழுப்பினர். பதிலுக்கு ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பினர். சபைக்குள் அமளிதுமளிக்கு மத்தியில் குறுகிய நேரத்தில் ஜனாதிபதி அங்கிருந்து வெளியேறியதைக் காணக்கூடியதாக இருந்தது. இலங்கை ஜனாதிபதியொருவர் பாராளுமன்றத்திற்கு வந்து எதிரணியின் கூச்சல் குழப்பத்தினால் வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது இதுவே முதற்தடவையாக இருக்க வேண்டும்.

பிரதமரின் உரைக்கு வருவோம். கடந்த காலத்தில் அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாடு என்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய இலங்கை இப்போது வங்குரோத்து அடைந்துவிட்ட நாடு என்ற நிலையில் பேச வேண்டியிருப்பதால் சிக்கலான சூழ்நிலையை எதிர்நோக்குகிறது என்று குறிப்பிட்ட அவர் முதற்சுற்று பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்திருக்கிறது. ஆனால், இலங்கை முன்வைக்க வேண்டியிருக்கின்ற கடன் மறுசீரமைப்பு திட்டத்திலேயே நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கக்கூடிய உதவி தங்கியிருக்கிறது என்று கூறினார்.



அரசாங்கத்தினால் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கும் வெளிநாட்டு நிபுணத்துவக் கம்பனிகள் கடன் மறுசீரமைப்பு திட்டமொன்றைத் தயாரிக்கின்றன. அந்த திட்ட அறிக்கையை அரசாங்கம் அடுத்தமாதம் நாணய நிதியத்திடம் கையளிக்கும். அதிகாரிகள் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டதும் அது நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். ஆனால்,எமது நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக கடனை மீளச்செலுத்துவதில் ஒரு நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய திட்டமொன்றை (Debt Sustainability) நாம் தனியாக சமர்ப்பிக்கவேண்டியிருக்கிறது. அந்த திட்டம் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் பட்சத்தில்தான் அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையை எட்டக்கூடியதாக இருக்கும். இதற்கு புறம்பாக, இலங்கைக்கு பெருமளவிலான உதவிகளைப் பெறுவதற்கு குறிப்பாக இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நேச நாடுகளை உள்ளடக்கிய உதவி வழங்கும் நாடுகள் கூட்டமைப்பின் (Aid Consortium) உச்சிமகாநாடொன்றுக்கான ஏற்பாடுகளைச் செய்யவிருப்பதாகவும் பிரதமர் தனதுரையில் கூறினார்.

இதனிடையே அவர் கடந்தவாரம் அல் ஜஸீரா செய்திச் சேவைக்கு அளித்த நேர்காணலில் 18 மாதங்களில் தற்போதைய பொருளாதார நிவைரத்தில் தன்னால் மாற்றத்தை ஏற்படுத்திக்காட்ட முடியும் என்றும் அடுத்த வருடமும் இடர்பாடுகள் நிறைந்ததாகவே இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.



விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரப் போக்குகள் குறித்து வெளியிட்ட புள்ளிவிபரங்கள் அண்மைய எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடியில் ஓரளவேனும் தணிவு ஏற்படும் என்ற நம்பிக்கையை தருவனவாக இல்லை. கடந்த இரு வருடகால தவறான பொருளாதார முகாமைத்துவம் பத்து வருடகாலத்துக்கு முன்னேற்றத்தை பின்தள்ளியிருக்கிறது. தற்போதைய பொருளாதார சகதியில் இருந்து வெளிக்கிளம்புவதற்கு மேலும் மேலும் கடன்களைப் பெறவேண்டியிருக்கும். நிலைவரம் ஓரளவுக்கு மேம்படுவதற்கு முன்னதாக அரசாங்க கடன் நிகர உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் நோக்குகையில் 140 சதவீதமாக அதிகரிக்கும். பாவனையாளர் விலைச் சுட்டெண்ணுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இவ்வருட இறுதியளவில் பணவீக்கம் 60 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். அவரது அறிவிப்புக்கள் நீண்டகால பொருளாதார திட்டங்கள் தொடர்பானவையாக இருந்தனவே தவிர மக்கள் தற்போது எதிர்நோக்குகின்ற இடர்பாடுகளுக்கு உடனடி நிவாரணங்களை தருவனவாக இருக்கவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஒரு சிரேஷ்ட ஆராய்ச்சியாளரான கலாநிதி கணேசன் விக்னராஜா எமது நாட்டின் பொருளாதார நிலைவரம் குறித்து வெளியிட்டிருக்கும் கருத்தை வாசகர்களின் கவனத்துக்கு கொண்டு வருவது உகந்ததாக இருக்கும். வீழ்ச்சியடைந்து கொண்டு போகும் பொருளாதாரத்தை ஓரளவேனும் கண்ணியமான தளத்திற்கு கொண்டுவந்து வளர்ச்சியை மீள முடுக்கிவிடுவதற்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு 2000 - 2500 கோடி டொலர்கள் நிதி தேவைப்படும். விலைவாசி தொடர்ந்து கடுமையாக உயரப்போகின்ற அதே வேளை, ஆயிரக்கணக்கானவர்கள் தொழில்வாய்ப்புகளை இழந்து இலட்சக்கணக்கானவர்கள் வறுமைக்குள் தள்ளப்படும் ஆபத்து இருக்கிறது. நீண்டகால பொருளாதார மந்த நிலைக்குள் நாடு சிக்கும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் பாராளுமன்றத்தில் உரை யாற்றிய மறுநாள் புதிதாக அரசியலுக்கு வந்திருக்கும் இலங்கையின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா, பிரதமர் நிதியமைச்சர் பதவி யில் இருந்து விலக வேண்டும் என்றும் அவரின் அரசியல் விளையாட்டை தடுத்து நிறுத்தவேண்டிய தேவை இருக்கிறது என்றும் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தீவிரமடையும் அரசியல் குழப்பநிலை




> இரு மாதங்களுக்கு முன்னர் பதவியேற்ற போது முன்னென்றும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான அவசர நடவடிக்கைகளை பிரதமர் முன்னெடுப்பதற்கு அவகாசம் வழங்கவேண்டும் என்ற ஒரு புரிதல் பரவலாக காணப் பட்டது. ஆனால் நெருக்கடியில் சிறித ளவு தணிவு கூட ஏற்படவில்லை.

(08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிதியமைச்சர் என்ற வகையில் விக்கிரமசிங்க கசீனோ உரிமையாளர்களிட மிருந்து அரசுக்கு கிடைக்கவேண்டிய வரி நிலுவைகளை மீட்பதற்கும் வரி அதிகரிப்புக்களைச் செய்வதற்கான சட்டத்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும் யோசனைகளை அமைச்சரவைக்கு முன்வைத்த இரண்டாம் நாள் பெரேராவிடமிருந்து இந்த கோரிக்கை வந்திருக்கிறது. அவர் பல சூதாட்ட நிறுவனங்களின் உரிமையாளர் என்பது தெரிந்ததே.

“பிரதமர் விக்கிரமசிங்கவிடம் தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான உறுதியான திட்டமெதுவும் கிடையாது.

அதனால் அவர் நிதியமைச்சராக இருப்பதற்கு பொருத்தமற்றவர். பெரிய அனர்த்தம் ஒன்றுக்குத்தான் பிரதமர் திட்டமிடுகிறார். பொருளாதாரத்தை ஒரு மந்தநிலைக்கு கொண்டுவந்த டொலர் தட்டுப்பாட்டை தீர்ப்பதற்கான நாட்டம் அவரிடம் இல்லை. நண்பர்களிடம் கடன் பெறுவதே அவரின் திட்டம்.

“டொலர் வருவாய், கடன்பெறுதல், அவசர நிதியுதவி பெறுதல் மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தொடர்கடனுதவி ஆகியவற்றுடன் தொடர்புடைய சகல விவகாரங்களையும் பிரதமர் தாமதிக்கிறார். முதலீட்டாளர்களுக்கான 10 வருட பன்முக விசா திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதை தாமதிப்பது டொலர்களை பெருக்கும் திட்டங்களை பிரதமர் தடுக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

“விக்கிரமசிங்கவின் அரசியல் விளையாட்டை தடுத்துநிறுத்தவேண்டியிருக்கிறது. தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு பிரதமரும் அவரது ஆலோசகர்கள் குழுவும் வகுத்திருக்கக்கூடிய திட்டங்கள் குறித்து விவாதிக்க அவர்கள் முன்வரட்டும். நாட்டுக்கு டொலர்களைக் கொண்டுவரும் சகல திட்டங்களையும் அவர் தடுக்கின்றார்” என்று பெரேரா பிரதமரை குற்றஞ்சாட்டினார்.

அவரின் குற்றச்சாட்டு குறித்து பிரதமர் பிரதிபலிப்பு எதையும் உடனடியாக வெளியிடவில்லை. ஆனால், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவாசம் கசீனோக்களிடம் இருந்து ஒரு ஒழுங்கமைவான முறையில் வரி அறவிடுவதற்கு பிரதமர் முயற்சிப்பதால்தான் பெரேரா அவரை நிதியமைச்சர் பதவியில் இருந்து விலகக் கேட்கிறார் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகர்கள் கசீனோக்களை நடத்துகிறார்கள். ஆனால் 12 வருடங்களாக கசீனோக்களிடம் இருந்து திட்டமிட்ட முறையில் வரிகள் அறவிடப்படவில்லை. அதை அமைச்சரவைக்கு விளக்கிக் கூறி பிரதமர் கசீனோ வரிகளை ஒழுங்கமைக்க அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார் என்றும் காரியவாசம் தெரிவித்தார்.

எது எவ்வாறிருந்தாலும், அரசியலுக்கு வந்து இரு வாரத்திற்குள் பெரேரா விக்கிரமசிங்கவை நிதியமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு கேட்பதற்கு துணிச்சல் கொள்கிறார் என்றால் அதற்கு வலுவான ஒரு பின்புலம் இல்லாமல் இருக்காது. பெரேரா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. ஆனால் அவருக்கும் பிரதமருக்கும் இடையில் இரு மாதங் களுக்கு முன்பிருந்த உறவு நிலை இப்போது இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக்குழு வேண்டாவெறுப்புடனே முதலில் சகித்துக்கொண்டது. ஆனால் நாளடைவில் அவரை பதவிநீக்கி விட்டு பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஒருவரை பிரதமராக்கி புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு அவர்கள் பல தடவைகள் ஜனாதிபதியைக் கேட்டார்கள்.

அதை உடனடியாக செய்யக்கூடிய வலுவான நிலையில் ஜனாதிபதி இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் உட்பட சர்வதேச சமூகத்திடம் இருந்து உதவிகளைப் பெற வேண்டிய அவசரத்தேவை அதற் கொரு காரணம். ஆனால், தம்மிக்க பெரேராவின் அமைச்சின் கீழ் தொடர்ச் சியாக பல முக்கிய நிறுவனங்களை கொண்டு வருவதன் மூலம் அவருக்கு தாங்கள் கொடுக்கின்ற முக்கியத்து வத்தை ஜனாதிபதி வெளிக்காட்டி வருகிறார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக்குழு இன்னமும் ராஜபக்சாக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு இசைவான முறையிலேயே விவகாரங்களை அணுகுகின்றது என்பதால் அவர்கள் பெரேராவுக்கு ஆதரவை வழங்குவார்கள். அதனால் அமைச்சரவைக்குள் பிரதமரும் பெரேராவும் இரு மையங்களாக தோற்றமளிக்கக்கூடிய நிலை உருவாகிவருகிறது.

பாராளுமன்றப் பலத்தைப் பொறுத்தவரை பிரதமரின் நிலை பரிதாபகரமானது. அவருக்காக பேச சபைக்குள் ஒருவர் தானும் இல்லை. எதிரணிக் கட்சிகள் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி , சிறிலங்கா சுதந்திர கட்சி, ராஜபக்ச அரசாங்கத்தின் நேச அணிகளாக இருந்து பின்னர் பிரிந்து சுயாதீன குழுவாக இயங்கும் 10 கட்சிகள் மற்றும் சுயாதீன அணியாக இருக்கும் பொதுஜன பெரமுன அதிருப்தியாளர்கள் எல்லோருமே விக்கிரமசிங்க பிரதமராக இருப்பதை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

தன்னை நியாயப்படுத்தி தான் மாத்திரமே சபைக்குள் பேசவேண்டிய நிலையில் பிரதமர் இருக்கிறார். தன்னை ஒரு சுயாதீனமான பிரதமர் என்று இந்திய தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் குறிப்பிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க சவால்களை ஏற்றுக்கொண்டு பிரதமர் பதவியை பொறுப்பேற்க எவரும் முன்வராத ஒரு நேரத்தில் தானே முன்வந்ததாக பிரதமர் விக்கிரமசிங்க கூறிய போதிலும், கடந்த பாராளுமன்றத்தேர்தலில் முற்றுமுழுதாக துடைத்தெறியப்பட்ட தனது கட்சியின் செல்வாக்கை மீட்டெடுக்க ஒரு வாய்ப்பாக தனது தற்போதைய பதவிநிலையை அவர் பயனபடுத்துவதில் நிச்சயம் நாட்டம் காட்டவே செய்வார். பொருளாதார நெருக்கடியில் தணிவை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகுமானால் அதை அவர் ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்கால தேர்தல் வாய்ப்புக்களுக்கு பயன்படுத்தவே செய்வார். தனது கட்சியின் தன்னந்தனி உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துக்கொண்டு, தனக்கு அரசியலில் வரலாற்று பின்னடைவை ஏற்படுத்திய அதே ராஜபக்சாக்களின் கட்சியின் பாராளுமன்றக்குழுவின் பலத்தில் பிரதமராக வருவதற்கு விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாரால் முடியும்?



இரு மாதங்களுக்கு முன்னர் பதவியேற்றபோது முன்னென்றும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான அவசர நடவடிக்கைகளை பிரதமர் முன்னெடுப்பதற்கு அவகாசம் வழங்கவேண்டும் என்ற ஒரு புரிதல் பரவலாக காணப் பட்டது. ஆனால் நெருக்கடியில் சிறிதளவு தணிவு கூட ஏற்படவில்லை. இரு மாதங்கள் கடந்த நிலையில் எரிபொருட்கள் இல்லாத நாடு பிரகடனப்படுத்தப் படாத முடக்கநிலைக்கு வந்திருக்கிறது.

முன்னர் ஜனாதிபதியை வீட்டுக்குப் போ என்று கேட்ட மக்கள் இப்போது பிரதமர் விக்கிரமசிங்கவையும் வீட்டுக்குப் போ என்று முழக்கங்களை எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். பொருளாதார இடர்பாடுகளினால் திணறிக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தைத் தரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கமுடியாமல் அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. எரிபொருள் கப்பல்களின் வருகை குறித்து அமைச்சர்கள் மக்களுக்கு “ கண்ணாடியில் நிலவை” காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கோட்டாபய- விக்கிரமசிங்க அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்ற முழக்கம் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி விட்டது. அரசியல் கட்சிகள் மாத்திர மல்ல, சிவில் சமூக அமைப்புக்கள், மதத்தலைவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் துறைசார் நிபுணத்துவ அமைப்புக்கள் என்று பல தரப்புகளும் அரசாங்கம் பதவி விலகி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கு வழிவிடவேண்டும் என்று குரல் எழுப்புகின்றன. பாராளுமன்ற கட்சிகள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் தங்களுக்குள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றன. ஆனால்,இதுவரையில் எந்த இணக்கப்பாடும் ஏற்படுவதற்கான அறிகுறியில்லை.

இத்தகையதொரு பின்புலத்தில், மக்கள் போராட்டங்கள் மீண்டும் தீவிரமடைத் தொடங்கியிருக்கின்றன. ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கான வியூகங்களை வகுப்பதில் அக்கறை காட்டுகிறாரே தவிர, மக்களின் கோரிக்கைகளுக்கு இணங்கத் தயாராயில்லை.

இதனால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து கொண்டிருக்கும் அதே வேளை அரசியல் குழப்பநிலையும் அதிகரிக்கிறது. அவசர உதவிகளைப் பெறுவதற்கு சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறுவதற்கு அவசியமான அரசியல் உறுதிப்பாடு கானல் நீராகவே தெரிகிறது.

# சர்வகட்சி அரசாங்கம்:

# தமிழ் கட்சிகள் என்ன செய்யவேண்டும்?

**சி.அ.யோதிலிங்கம்**

> தற்போதைய நெருக்கடி என்பது பெரும்தேசியவாதத்தின் லிபரல்பிரிவு, பெரும்தேசிய வாதத்தின் இனவாதப்பிரிவு, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் குறிப்பாக தமிழ் மக்கள் புவிசார் அரசியல்காரரான இந்தியா, பூகோள அரசியல் காரர்களான அமெரிக்கா, சீனா என்பவற்றின் நலன்களுக்கிடை யிலான மோதல்களினால் ஏற்பட்டதாகும்.

இலங்கைத் தீவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. விக்டர் ஐவன் போன்ற சிங்களக் சிவில் சமூகப்பிர முகர்களின் ஆலோசனையுடனும், பங்களிப்புடனும் இவை மேற்கொள் ளப்படுகின்றன.

கடந்த வாரம் இடம்பெற்ற முதலாவது கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுடன் தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்கினேஸ்வரனும் பங்குபற்றியிருந்தார்.

இரண்டாவது கலந்துரையாடல் கடந்த 05ம் திகதி பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சுயாதீனப் பாராளுமன்றக் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன பங்குபற்றியிருந்தன. இதில் பல்வேறு தரப்பினரது ஆலோசனைகளை ஒன்றிணைத்து ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

இந்தக் கலந்துரையாடல்களில் தமிழ் மக்கள் சார்பில் பங்குபற்றிய விக்கினேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தார்களா? அவ்வாறாயின் எத்தகைய ஆலோசனைகளை முன்வைத்தார்கள் என்பது பற்றி எந்தத் தகவலும் இது வரை வெளிவரவில்லை. இது பற்றி கட்சிகளுக்குள்ளேயோ கூட்டணிக்குள்ளேயோ எந்தவித கலந்துரையாடல்களும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

தற்போதைய நெருக்கடி என்பது பெரும்தேசியவாதத்தின் லிபரல்பிரிவு, பெரும்தேசியவாதத்தின் இனவாதப் பிரிவு, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் குறிப்பாக தமிழ் மக்கள் புவிசார் அரசியல்காரரான இந்தியா, பூகோள அரசியல் காரர்களான அமெரிக்கா, சீனா என்பவற்றின் நலன்களுக்கிடையிலான மோதல்களினால் ஏற்பட்டதாகும்.

நெருக்கடிக்கான தீர்வு என்பது சம்பந்தப்பட்ட ஐந்து தரப்பினரதும் நலன்கள் சந்திக்கின்ற புள்ளியாகும். எனவே இந்த நெருக்கடி மைதானத்தில் தமிழ் மக்களுக்கும் தவிர்க்கப்பட முடியாத கௌரவமான இடம் இருக்கின்றது. தமிழ் மக்களைப் புறக்கணித்து விட்டு இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்பதே யதார்த்தமான உண்மையாகும். தமிழ் அரசியல் கட்சிகள் இந்த உண்மையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எனவே நெருக்கடித் தீர்வு முயற்சியில் தமிழ் மக்களின் அபிலாசைகளை கௌரவமாக முன்வைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் தயங்கக் கூடாது.

சர்வதேச நாணய நிதியம் கடும் நிபந்தனைகளை அரசாங்கத்தின் மீது விதித்துள்ளது. அதில் ஒன்று இராணுவத்தின் ஆளணியைக் குறைக்க வேண்டும் என்பதாகும். இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இராணுவத்தின் ஆளணியைக் குறைக்க முடியாது. தவிர நாட்டின் ஸ்திரமான நிலையையும் சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது. அதற்கும் கூட இனப்பிச்சினைக்கான தீர்வு நிபந்தனையாக உள்ளது.

அரசியல் தீர்வாக தற்போதுள்ள 13 வது திருத்தத்தை திணிக்கும் முயற்சி இடம் பெறலாம். தமிழ் மக்கள் அதனை நிராகரிக்க வேண்டும். 13 வது திருத்தம் அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளியாக கூட இருக்கப்போவதில்லை. ஒற்றையாட்சிக்குட்பட்ட சுயாதீனமில்லாத பொறிமுறையைக் கொண்ட 13 வது திருத்தம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

தென்னிலங்கையில் செயற்படும் எதிர்க்கட்சிகளின் அணி ஏதோ ஒரு வகையில் தமிழ்த் தரப்பையும் சர்வகட்சி அரசாங்கச் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்யவே முயற்சிக்கின்றது. ஆனால் அவர்களின் பெரும்பான்மை வெற்றுக் காசோலையில் கையெழுத்துப் பெறவே விரும்புகின்றது. சிறிய பிரிவினர் தற்போதுள்ள 13வது திருத்தத்தை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிடுவதன் மூலம் நிலைமையை சமாளிக்க முயல்கின்றன.

தமிழ் மக்களின் தேச அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், சுயநிர்ணய சமஸ்டி என்பவற்றை பேசுவதற்கு அவர்கள் இன்னமும் தயாராகவில்லை. சர்வதேச தரப்புகளும் வலுவான கோரிக்கைகளை வைக்காமல் சிங்கள தரப்போடு இணைந்து செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. அண்மையில் சுவிஸ்லாந்து அரசின் பேரில் அழைக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளிடமும் மறைமுகமாக இதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் அதற்கு இணங்கவில்லை.

இன்று சிங்கள தரப்பும், சர்வதேச சக்திகளும் பெரும் பொறிக்குள் மாட்டுப்பட்டுள்ளனர். தமிழ் மக்களினதும் பங்களிப்பு இல்லாமல் இந்த நெருக்கடியை தீர்க்க முடியாது என்பதே அந்தப் பொறிமுறை. இந்தச் சூழலை தமிழ்த் தரப்பு அவதானமாக கையாள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் அண்மைய காலத்திற்கு சந்தர்ப்பங்கள் வருவதற் கான சாத்தியங்கள் குறைவு.




எனவே சர்வகட்சி அரசாங்கம் முயற்சிகளின் போது தமிழ்த் தரப்பு தங்கள் பக்க கோரிக்கையை அழுத்தமாக முன்வைக்க வேண்டும். இது தொடர்பாக மூன்று வகையான செயல்திட்டங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

தமிழ்த் தரப்பின் பங்களிப்பைப் பெறுவதற்கு சிங்களத்தரப்பு நல்லெண் ணத்தைக் காட்ட வேண்டும். எனவே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப் பட்டு ஒரு மாதத்திற்குள் பின்வரும் விடயங்களுக்கு தீர்வு காணுதல் வேண்டும்.

அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் எந்தவித நிபந்தனையுமில்லாமல் அரசி யல் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

நிலைமாறு கால நீதிக் கோட்பாட் டிற்கமைய காணாமல் ஆக்கப்பட் டோர் விவகாரம் தீர்க்கப்படல் வேண் டும். இது விடயத்தில் உண்மையைக் கண்டறிதல், நீதி வழங்குதல், இழப்பீடு வழங்குதல் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு கால அட்டவணை வகுத்தல் வேண்டும். இவர்களுக்கான இழப்பீடு தீர்மானிக்கப்படும் வரை தற்போதைய விலைவாசி உயர்வுக்கேற்ப மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். முன்னைய 6000 ரூபா எந்த வகையிலும் போதுமானதல்ல.

இராணுவம் கைப்பற்றியுள்ள காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும்.

2009 க்கு பின்னர் உருவாக்கப் பட்ட அனைத்து சிங்களக் குடியேற் றங்களும் அகற்றப்படல் வேண்டும்.

தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை, பௌத்த விவகாரங்கள் அமைச்சு என்பன தமிழர் தாயகத்தில் மேற்கொள்கின்ற ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பாக சிங்கள தேசத்திற்கும் தமிழ்த் தேசத்திற்கும் இடையே சமூக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படல் வேண்டும். அதில் தமிழ் தேச அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய அங்கீகாரம், சுய நிர்ணய சமஸ்டி என்பன ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதற்கான அரசியல் யாப்புச்சட்ட வடிவம் ஆறு மாதங்களுக்குள் உருவாக்கப்படல் வேண்டும்.



அரசியல் தீர்வு வரும் வரை இடைக்கால நிர்வாகம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அந்த நிர்வாகத்திற்கு காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் உட்பட தமிழ் மக்களின் விவகாரங்களை கவனிப்பதற்கான சுயமான அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியம் இந்த மூன்று செயல் திட்டங்களுக்குமான ஒப்புதல் சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும்.

இந்த செயல் திட்டங்களை எதிர்க்கட்சிகள் தரப்பு ஏற்காவிட்டால் சர்வகட்சி அரசாங்க முயற்சிகளுக்கு தமிழ்த் தரப்பு எந்த பங்களிப்புகளையும் வழங்கக் கூடாது. அந்த முயற்சிகளில் இருந்து முழுமையாக வெளியேற வேண்டும். இதனை மீறி தமிழ் தேசியக் கட்சிகள் செயற்படுமாக இருந்தால் அவர்கள் முழுமையாக மக்கள் முன் அம்பலப்படுத்தப படுவர்.



(கட்டுரையாளர், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனர், யாழ். ஊடக மையத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் இங்கே கட்டுரையாகத் தரப்பட்டுள்ளது)

# கொழும்பில் வெடித்தது மக்கள் புரட்சி

- ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை முற்றுகை
- விமானங்கள், கப்பல்களில் தப்பிசென்ற முக்கியஸ்தர்கள்?
- மோதலில் 33 பேருக்கு காயம்
- மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் கைக்கோர்த்த பாதுகாப்பு அதிகாரிகள்
- ராஜித சேனாரத்ன எம்.பி மீது தாக்குதல்
- மீண்டும் மாற்றத்துக்கு வழிவகுத்த 09

**க.ஆ.கோகிலவாணி**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்கான இறுதி மக்கள் போராட்டத்துக்காக கொழும்பில் நேற்று (9) அலை என திரண்ட மக்கள் வெள்ளமானது, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டது.

பலத்த பாதுகாப்பையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தையும் ஜனாதிபதி மாளிகைகயையும் முற்றுகையிட்டனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்று திரண்ட போராட் டக்காரர்கள் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டனர்.

பல்லாயிரக் கணக்கானோர் ஜனாதிபதி செயலகத்துக்குள் ஒரே தடவையில் உள்நுழைந்தனர்.

ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்தவர்கள் பாரிய கோஷத்தை எழுப்பியதுடன் செயலகத்துக்குள் இருக்கும் முக்கிய அறைகளில் இருந்து புகைப்படங்கள் எடுத்து அதனை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிளைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் உள்நுழைந்தனர். இதன் காரணமாக ஜனாதிபதி மாளிகையானது ஆர்ப்பாட்டக்காரர்களின் வசமானது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

பாதுகாப்பு தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலில் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடங்களாக சுமார் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்கான இறுதி போராட்டம் என்ற தொனிப்பொருளில் ஜூலை 09ஆம் திகதியான நேற்று தலைநகரான கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் வெள்ளம் அலைதிரண்டது.

ஆர்ப்பாட்ட பேரணிகள் முடிவுறும் பகுதியாக கொழும்பு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம பிரதேசம் அமைந்திருந்ததால் நாட்டின் பல பாகங்களில் இருந்து கொழும்பை நோக்கி வந்த பேரணிகள் அனைத்தும் காலிமுகத்திடலை நோக்கி சென்றன.

இதனால் கோட்டா கோ கம பிரதேசத்தில் மக்கள் வெள்ளம் அலைதிரண்டதுடன் கோஷங்களால் காலிமுகதிடல் அமைதியை இழந்தது.

காலை 9.00 மணிக்கு பின்னர் கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணிகள் ஆரம்பமாகின.

மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள், ஆசிரியர் சங்கள், சுகாதார தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள், பஸ் போக்குவரத்தில் ஈடுபடும் தரப்பினர், கலைஞர்கள், விரிவுரையாளர்கள், அரச, தனியார் ஊழியர்கள், சாதாரண பொதுமக்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தாதியர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்துகொள்வதற்காக கண்டி, அனுராதபுரம், காலி, மாத்தறை உள்ளிட்ட வெளிமாவட்டங்களிலிருந்தும் ரயில்களில் வருகை தரப்பினர் கோட்டை புகையிரத நிலையத்தில் ஒன்றுகூடி அங்கிருந்து கோட்டா கோ கமவை நோக்கி பேரணியாக சென்றனர்.

கொள்கலன்கள், சைக்கிள்கள், லொறிகள், மண் அகற்றும் இயந்திரங்கள், நகரசபையிள் குப்பை அல்லும் வாகனங்கள் உள்ளிட்ட பல வாகனங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பை நோக்கி வருகை தந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வத்தேகம, ஹொரணை, ராகம, களனி, அவிஸ்ஸாவனை, கெஸ்பேவ, கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களில் இருந்தும் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியாக கோட்டா கோ கமவை நோக்கி சென்றனர்.

மேலும் பல பிரதேசங்களிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணிகள் கோட்டா கோ கமவை நோக்கி வருகை தந்தனர்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணிமுதல் மறுஅறிவித்தல் விடுக்கும் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

எனினும் நேற்று காலை 8.00 மணியுடன் பொலிஸ் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. அத்துடன், சமூப ஊடகங்களும் நேற்றும் நேற்று முன்தினமும் இரண்டு சுமார் ஒரு மணித்தியாலம் செயலிழந்தது. இவ்வாறான சூழ்நிலையிலேயே திட்டமிட்டப்படி நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்கான இறுதி மக்கள் போராட்டம் என்ற தொனிப்பொருளிலான போராட்டம், பேரிணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க் கட்சி எம்.பிகளான திஸ்ஸ அத்தநாயக்க, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ஹர்சன ராஜ கருணா, சரத் பொன்சேக்கா, வடிவேல் சுரேஸ் உள்ளிட்ட பல எம்பிக்கள் பங்கேற்றிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த ராஜித சேனாரத்ன மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றபோது காயமடைந்த நிலையில் வடிவேல் சுரேஸ் எம்.பி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் இராணுவ வீரர்கள் சிலரும் இணைந்துகொண்டனர்.

அத்துடன் பொலிஸ் அதிகாரி ஒருவரும் மக்கள் போராட்டத்தில் கைக்கோர்த்திருந்தார்.

பொலிஸ் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் அதிகாரி மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தலைக்கவசத்தை தூக்கியெறிந்து விட்டு உரத்த தொனியில் போராட்டம் வெற்றிப்பெற வேண்டும் என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டுள்ளார்.

கோ ஹோம், போராட்டம் வெற்றிபெற வேண்டும் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்றவாறு அவர் கோஷம் எழுப்பியவாறு போராட்டத்தில் இணைந்துகொண்டார்.

இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றிருந்த இளைஞர்கள் பொலிஸ் அதிகாரியின் செயற்பாட்டை பாராட்டும் வகையிலும் வரவேற்கும் வகையிலும் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

மஹரகமவிலிருந்து கொழும்பை நோக்கி சென்ற ஆர்ப்பாட்டப் பேரணியிலேயே அவர் இவ்வாறு இணைந்துகொண்டுள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் முக்கியஸ்தர்களின் வாகனங்கள் கட்டுநாயக்க நோக்கிப் பயணித்தமையை சமூக ஊடகங்களின் வாயிலான அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

மூன்று வாகனங்கள் இவ்வாறு கட்டுநாயக்க நோக்கி பயணித்துள்ளதுடன் இந்த வாகனத்தில் பயணித்தவரின் விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்த வாகனங்கள் விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதிக்குள் செல்லும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

அத்துடன் கொழும்பு துறைமுகத்திலிருந்து கடற்படைக்கு சொந்தமான சித்துரல மற்றும் கஜபாகு ஆகிய கப்பல்கள் அங்கிருந்த சில நபர்களுடன் புறப்பட்ட சென்ற காணொளியை துறைமுகத்தில் பணியாற்றியவர்கள் வெளியிட்டிருந்தனர்.

மிகவும் வேகமாக பயணப்பைகளை மூவர் கப்பல்களில் ஏற்றும் காட்சிகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கப்பல்களில் சென்றவர்கள் யாரென்று தனக்கு தெரியாது என்று துறைமுக அதிபர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான வன்முறை கட்டவிழ்த்து நேற்றுடன் நேற்றுடன் மூன்று மாதங்கள் நிறைவ டைந்த நிலையிலேயே நேற்றைய தினம் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

மே 09 ஆம் திகதி வன்முறையானது முன்னாள் பிரதமரை பதவி விலக செய்து நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜூலை 09ஆம் திகதி ஜனாதிபதி செயலகமும் ஜனாதிபதி மாளிகையும் போராட்டக்காரர்கள் வசமானதுடன் மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டமாக இந்த போராட்டம் மாறியுள்ளதுடன் மீண்டுமொரு ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்துள்ளது.

# டாப்சியுடன் சேரும் சமந்தா!



நடிகை டாப்சி தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கி படங்களைத் தயாரித்து வருகின்றார்.

இவர் அடுத்துத் தயாரிக்க உள்ள படத்தில் சமந்தா கதாநாயகியாக நடிக்க இருக்கிறார் என்ற தகவலை உறுதி செய்துள்ளார் டாப்ஸி.

சமந்தாவைப் பொறுத்தவரை பொலிவூட்டுக்குள் அடி எடுத்து வைத்தாலும், தற்போது இணையத் தொடர்களின் பக்கமே கவனம் செலுத்தி வருகின்றார். தற்சமயம் சமந்தா அதே ராஜ் மற்றும் டிகே. இரட்டை இயக்குநர்களின் இணையத் தொடரில் நடித்து வருகின்றார்.



# நிலவில் ஜொலிக்கும் ரம்யா!

ஜோக்கர், ஆண்தேவதை, ராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் போன்ற படங்களில் நடித்த ரம்யா பாண்டியன் தற்போது இடும்பன்காரி மற்றும் நண்பகல் நேரத்து மயக்கம் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

இவர் நிலாவெளிச்சத்தில் தான் எடுத்துக் கொண்டு புகைப்படங்களை பதிவிட்டு வருகிறார். நிலவு வெளிச்சத்தில் அவர் எடுத்து வெளியிட்ட இந்த கவர்ச்சிகரமான கறுப்பு வெள்ளை மற்றும் வர்ணப் படங்களைப் பார்த்து இன்ப அதிர்ச்சி அடைந்துள்ளனர் ரசிகர்கள்.

# பெரும் வரவேற்பு

பொன்னியின் செல்வன் படத்தின் டீசர் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்தப் படம் சோழ சாம்ராச்சியத்தின் சரித்திர கதை என்பதால் அதற்கு ஏற்றபடி காட்சிகளை உருவாக்கி உள்ளார் மணிரத்னம். பிரம்மாண்ட கோட்டைகள், அரண்மனைகள், போர்க்காட்சிகள், கடற்கரை ஒட்டிய பகுதிகளில் நடக்கும் போர்க்களம் என டீசரில் பிரமாண்டத்தை காட்டி படம் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளார் மணிரத்னம்.

மேலும் படத்தில் நடித்துள்ள முக்கிய பாத்திரங்கள் அனைவரையும் ஒரு காட்சியில் வருவது போன்று டீசரை வடிவமைத்துள்ளார். ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசையும் டீசருக்கு உயிர் கொடுத்துள்ளது.

# தமன்னாவின் புது அனுபவம்

விஷாலின் ஆக்சன் படத்துக்குப் பிறகு தமிழில் புதிய படங்கள் இல்லாத நிலையில், தெலுங்கு, ஹிந்தியில் தொடர்ந்து நடித்து வருகிறார் தமன்னா. அத்துடன், இணைய தொடர்களிலும் நடிக்கிறார்.

இந்த நிலையில் ஈசா யோகா மையத்திற்கு சென்றபோது தான் பெற்ற அனுபவத்தை ஒரு காணொலியாக



இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு இருக்கிறார் தமன்னா. அந்தக் காணொலியில், ஈஷா யோகா மையத்தில் இருந்த மிக அழகான மூன்று நாட்களை இன்னும் கடந்து வருகிறேன். சாம்பவி கிரியாவை கற்றுக்கொள்ள விரும்புவதிலிருந்து இந்த உலகம் எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது என்பதை அனுபவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.



# முதல் முயற்சி

மிஷ்கின் இயக்கிய பிசாசு படம் வரவேற்பை பெற்றதை தொடர்ந்து அதன் இரண்டாம் பாகத்தை இயக்கி உள்ளார் மிஷ்கின். முதன்மை வேடத்தில் ஆண்ட்ரியா நடித்துள்ளார்.

இதன் படப்பிடிப்பு முடிந்து இறுதிக் கட்டப் பணிகள் நடக்கின்றன. இந்தப் படத்தை தெலுங்கில் -பிசாச்சி 2“ என்ற பெயரில் மொழிமாற்றம் செய்து வெளியிடுகின்றனர். இதற்காக ஆண்ட்ரியாவே தெலுங்கில் குரல் கொடுத்துள்ளார். இது அவரின் முதல் முயற்சி. இதற்காக தான் எடுத்த பயிற்சியை அவர் தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.



# நகைச்சுவையில் அனுஷ்கா

தமிழ், தெலுங்கு படங்களில் முன்னணி நடிகையாக வலம் வந்த அனுஷ்கா, பாகுபலி படத்துக்கு பிறகு சரியான பட வாய்ப்புகள் இல்லாமல் இருந்து வருகிறார்.

தற்போது ஒரு நகைச்சுவைப் படத்தில் அனுஷ்கா நடிக்க போகிறார் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. இதற்கு முன்பு பெரிதாக நகைச்சுவை வேடங்களில் நடிக்காத அனுஷ்கா, இந்த படத்தில் முழு நீள நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடிக்கப் போகிறாராம். இந்தப் படம் குறித்த அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகவுள்ளது.




# திரைவிமர்சனம்

## திரைப்படம் - யானை

**இயக்கம் - ஹரி**
**இசை - ஜீ. வி. பிரகாஷ்குமார்**
**நடிப்பு - அருண் விஜய், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி**

தமிழ் திரையுலகில் கடந்த 20 வருடங்களாக வர்த்தக படங்களையே மட்டும் இயக்கி வரும் இயக்குனர்களில் ஹரியும் ஒருவர். நெல்லை, தூத்துக்குடி சுற்றுவட்டாரங்கள் மட்டுமே அவரின் படங்களின் கதைக்களமாக இருக்கும். இந்தப் படத்தில் இராமேஸ்வரத்தை கதைக்களமாக்கி இருக்கிறார். அது மட்டுமே அவரின் முந்தைய படங்களில் இருந்து கொஞ்சம் மாறியிருக்கிறது. மற்றும்படி அதே குடும்பம், சண்டை, குடும்ப பாசம், காதல் என படம் நகர்கிறது. இருந்தாலும், எந்த இடத்திலும் தொய்வில்லாமல் பரபரப்பாக திரைக்கதையை நகர்த்தி ரசிக்க வைத்திருக்கிறார்.

இராமேஸ்வரத்தில் பி. வி. ஆர். குடும்பம் எனப் பல தொழில்களைச் செய்யும் பெரிய குடும்பம் ராஜேஷ் குடும்பம். மறைந்த முதல் மனைவி மகன்கள் சமுத்திரக்கனி, போஸ் வெங்கட், சஞ்சீவ், இரண்டாவது மனைவி ராதிகாவின் மகன் அருண் விஜய். பி. வி. ஆர் குடும்பத்துக்கும், சமுத்திரம் என்பவரின் குடும்பத்துக்கும் நீண்ட நாள் பகை.

அருண் விஜய் அதிரடியான இளைஞராக இருப்பதால் பிவிஆர் குடும்பத்துக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் இருக்கிறது. இந்நிலையில் சமுத்திரக்கனியின் மகள் அம்மு அபிராமி, முஸ்லிம் இளைஞர் ஒருவரைக் காதலித்து அவருடன் ஓடி விடுகிறார். அம்முவின் காதல் பற்றி தெரிந்தும் அதை தன்னிடம் மறைத்ததற்காக அருண் விஜயை வீட்டை விட்டு வெளியேற்றுகிறார் சமுத்திரக்கனி. ராதிகாவும் மகனுடன் போய்விடுகிறார்.

அம்மு அபிராமி எங்கே சென்றார் என்பது யாருக்கும் தெரியவில்லை. சமுத்திரக்கனி சாதிப் பாசத்தால் அம்முவைக் கொல்ல நினைக்க, அவரைக் காப்பாற்ற நினைக்கிறார் அருண் விஜய். இதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஹரியின் படங்களில் பொருத்தமான கதாபாத்திரத் தேர்வு இருக்கும். அது இந்தப் படத்திலும் இருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் கதாபாத்திரங்களில் பொருத்தமாக நடித்திருக்கிறார்கள். தன்னுடைய முந்தைய படங்களின் காட்சிகள் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாகப் புதிய காட்சிகளை யோசித்திருக்கிறார் ஹரி.

தனது மாமா ஹரியின் இயக்கத்தில் அருண் விஜய் முதல் முறையாக இணைந்திருக்கும் படம். அருண் விஜயை தன்னுடைய இயக்கத்தில் எப்போதோ நடிக்க வைத்திருக்கலாம் ஹரி என படம் பார்த்ததும் சொல்ல வைக்கிறது. ஹரியின் இயக்கத்தில் விக்ரம், சூர்யா எந்த அளவிற்கு அதிரடியில் நடித்திருந்தார்களோ அதே அளவுக்கு அருண் விஜயும் நடித்திருக்கிறார். முறுக்கேறிய உடம்புடன் தன் குடும்பத்தைக் காப்பாற்ற எப்போதுமே துடிப்புடன் இருக்கிறார் அருண் விஜய்.



அண்ணன்கள்மீது வைத்திருக்கும் பாசம், அண்ணன் குழந்தைகள்மீது வைத்திருக்கும் பேரன்பு, பிரியா பவானி சங்கர்மீதான காதல், எதிரிகள் யாராக இருந்தாலும் தூக்கிப் போட்டு மிதிக்கும் தைரியம் என அருண் விஜய் ஒரு முழுமையான அதிரடி நாயகராக இந்தப் படத்தில் உயர்ந்திருக்கிறார்.

தமிழ்த் திரையுலகில் குடும்பப் பாங்கான, பாந்தமான நாயகர்களில் ஒருவர் பிரியா பவானி சங்கர். எந்தவித கவர்ச்சியும் காட்டாமல் தன் கதாபாத்திரங்களில் சிறப்பாக நடித்தால் ஒரு நடிகை பெயரெடுக்க முடியும் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார். தான் துரோகம் செய்துவிட்டதாக அருண் விஜய் கூறும் காட்சியில் அவருக்குப் பதிலடி கொடுத்து உண்மையைப் பேசும் காட்சியில் பிரியா பிரமாதப்படுத்திவிட்டார்.

கே.ஜி.எப் வில்லன் இராமச்சந்திர ராஜு இரண்டு வேடங்களில் வில்லனாக நடித்திருக்கிறார். அதிக வேலையில்லை, ஓரிரு காட்சிகளில் மட்டும் வந்து நடந்துவிட்டுப் போகிறார். அருண் விஜய் அண்ணனாக சாதிப் பாசம் மிக்கவராக சமுத்திரக்கனி, மற்ற அண்ணன்களாக போஸ் வெங்கட், சஞ்சீவ். ராஜேஷ், ஜெயபாலன், தலைவாசல் விஜய், ஐஸ்வர்யா ஆகியோரும் படத்தில் உண்டு. அருண் விஜயின் அம்மாவாக ராதிகா, சமுத்திரக்கனியின் மகளாக அம்மு அபிராமி. மற்ற கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த காட்சிகளை வைத்திருக்கிறார் இயக்குநர் ஹரி.

யோகி பாபு படம் முழுவதும் வருகிறார். ஒரு சில இடங்களில் மட்டும் சிரிக்க வைக்கிறார். புகழ் கதாபாத்திரம் திணித்தது போலவே இருக்கிறது. இவர்கள் இருவர் சம்பந்தப்பட்ட சில காட்சிகளை நீக்கியிருந்தாலும் பரவாயில்லை.

ஜீ. வி. பிரகாஷ் இசையில், “சண்டாளியே..” பாடல் ரசிக்க வைக்கிறது. இராமேஸ்வரம் சுற்று வட்டாரங்களை வளைத்து வளைத்து படமாக்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் கோபிநாத்.

வழக்கமான அதிரடிப் படம்தான் என்றாலும் சரியான குடும்ப பாசம், அளவான காதல் என தனது வர்த்தக முத்திரை பதித்துள்ளார் இயக்குநர் ஹரி.

# வரலாறு படைத்த இங்கிலாந்து!




ஒருநாள், இருபது -20 என சிறிய வடிவங்களுக்கு வேண்டுமானால் இது சாதாரணமாகத் தெரியலாம். ஐந்து நாட்கள் ஆடப்படும் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதுவும் நான்காவது இனிங்ஸில் துரத்தியடித்து நாங்கள் முழு முழுவதுமாக தயாராக இருக்கிறோம் என்பது இங்கிலாந்து அணியின் நம்பிக்கை அளவைக் காட்டுகிறது.

ஆம், பிரண்டன் மக்கலம் பயிற்றுநராகப் பொறுப்பேற்ற பிறகு நடந்த மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து அணி இதைத்தான் செய்திருக்கிறது . எனவேதான் இப்போட்டியின் முதல் மூன்று நாட்களில் இந்திய அணியின் கை ஓங்கியிருந்தாலும் இங்கிலாந்து சிறிதும் அசந்து போயிருக்கவில்லை. தாங்கள் திட்டமிட்டதை அப்படியே செயல்படுத்தினர் அந்த வீரர்கள். அவர்கள் காட்டிய தீவிரம் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களின் மொத்த நம்பிக்கையும் குலைத்தது. முடிவில் 378 என்ற இமாலய இலக்கை வெறும் மூன்றே விக்கெட்களை இழந்து அபாரமான வெற்றியைப் பெற்றிருக்கிறது இங்கிலாந்து.

போட்டி முடிந்த பிறகு பேசிய அணித்தலைவர் பென் ஸ்ரோக்ஸ் “இரண்டாவது இனிங்ஸில் இந்தியா 450 ஓட்டங்களுக்கு மேல் அடிக்கும் என எதிர்பார்த்தோம். காரணம், அதை நாங்கள் எப்படி துரத்துகிறோம் என்பதை சோதித்துப் பார்க்கலாம் என்று இருந்தோம்” என்று நினைத்ததாகக் கூறினார். அவர் கூறியதுபோல இங்கிலாந்து அணியால் 500 ஓட்டங்களைக்கூட துரத்தி அடித்திருக்க முடியும். ஆனால், 450 + ஓட்டங்களை அடிக்க வாய்ப்பிருந்தும் அதை இந்திய அணி மிக எளிதாக தவறிவிட்டது என்பதே நிதர்சனம்.

மூன்றாவது இனிங்ஸில் பந்த் - புஜாரா இணைப்பாட்டம் களத்தில் இருக்கும் வரை ஆட்டம் இந்தியாவின் வசமே இருந்தது. புஜாரா தன் விக்கெட்டைப் பறிகொடுக்க அங்கு தொடங்கியது அணியின் சரிவு. இங்கிலாந்தின் குறுந்தூர வியூகத்தை சமாளிக்க இயலாமல் முதல் இனிங்ஸைப் போலவே ஷ்ரேயாஸ் ஐயர் வீழ்ந்தார். அவரைத் தொடர்ந்து பந்தும் லீச் பந்தை ரிவெர்ஸ் ஸ்வீப் அடிக்க சென்று விக்கெட்டை பறிகொடுத்தார். இப்படி இங்கிலாந் தின் பந்துவீச்சால் அல்லாமல் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் விக்கெட்களைத் தாங்களாகவே விட்டுக் கொடுக்க ஆட்டம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவின் கைகளிலிருந்து நழுவியது.

இதேபோல இங்கிலாந்தின் முதல் விக்கெட் இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைத் தாண்டவும் இதை எளிதான பின்துரத்தலாக இருக்கும் என்ற அச்சம் எழ அடுத்தடுத்து 3 விக்கெட்கள் வீழ்ந்தன. அப்போது சற்றே இந்தியாவின் கை மீண்டும் ஓங்குவதாகத் தெரிந்தது. இதைப் பயன்படுத்தி இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு இந்திய பந்து வீச்சாளர்கள் நன்கு அழுத்தம் கொடுத்திருக்க முடியும். அதற்கு மாறாக ஒரு சரியான திட்டத்தை அமைத்து செயல்படாமல் பந்துவீச்சைத் தொடரவே போட்டியை முடிக்காமல் பெவிலியன் திரும்புவதாக இல்லை என்பது போல ஆடத்தொடங்கியது ஜோ ரூட், பெயர்ஸ்ரோ கூட்டணி.



சிராஜ், ஷர்துல் ஆகியோரின் பந்துவீச்சு சுத்தமாக எடுபடாமல் போனது. களத்தடுப்பு வியூகம், பந்துவீச்சு என அனைத்திலும் அதிரடி தாக்குதலில் இருந்து தற்காப்புக்கு மாறியது இந்தியா. பெயர்ஸ்ரோ பந்தைத் தூக்கி அடிப்பார் என லோங் ஒவ் பீல்ட் வைக்கப்பட அவரோ சிங்கிள்களை ஓயாமல் ஓடத் தொடங்கினார். பெயர்ஸ்ரோ கடைசி மூன்று போட்டிகளில் தன் நான்காவது சதத்தை அடித்தார். ரூட்டும் தன் அசத்தல் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்து சதத்தை நிறைவு செய்ய 250 ஓட்டங்களுக்கும் மேலாக சேர்ந்து குவித்த அக்கூட்டணி கடைசி வரை களத்தில் நின்றது.

இங்கிலாந்தின் கடைசி நான்கு வெற்றிகள் துரத்தலில் வந்தவைதான். நியூசிலாந்துடனான முதல் டெஸ்டில் 275 ஓட்டங்களை 78.5 ஓவர்களில், இரண்டாவது டெஸ்டில் 299 ஓட்டங்களை வெறும் 50 ஓவர்களில் இந்தத் தொடரின் கடைசி டெஸ்டிலும் 296 ஓட்டங்களை 54.2 ஓவர்களிலும் முடித்துள்ளது அந்த அணி. அதேபோல டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே 350 ஓட்டங்களுக்கு மேலான துரத்தல்களில் எதிரணி இரண்டாவது புது பந்தை எடுப்பதற்குள் முடிக்கப்பட்டது இதுவே முதல்முறை.

இங்கிலாந்து அணியின் ‘Bazzball’ ஆட்டமுறை அவர்கள் கூறியவரே டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு இலக்கணம் எழுதத் தொடங்கியுள்ளது.



# ஆணுக்குப் பின் சமனாம்!

இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் கோலோச்சி வரும் நிலையில் ஆங்காங்கே சில ஏற்றத்தாழ்வுகளும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன என்று பெண் பிரபலங்கள் வருத்தம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்நிலையில், ஆண், பெண் வேறுபாட்டைகளையும் விதமாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை அதிரடி முடிவு ஒன்றை எடுத்துள்ளது. அதன்படி நியூசிலாந்தில் ஆண் மற்றும் பெண் கிரிக்கெட் வீரர்கள் ஐந்தாண்டு கால சம ஊதியம் பெறும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்படி, ஆண் கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு போட்டிக்காக வழங்கப்படும் ஊதியத்துக்கு நிகராக இனி பெண் கிரிக்கெட் வீராங்கனைகளுக்கும் ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் விளையாட்டு ரீதியிலாக ஒரே ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்படுவது உலக கிரிக்கெட் அரங்கில் இதுவே முதன்முறை.

“ஆண்களுக்கு இணையாக, சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பெண் வீராங்கனைகள் ஒரே ஒப்பந்தத்தில் அங்கீகாரம் பெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இது ஒரு பெரிய முன்னேற்றம்” என்று நியூசிலாந்து பெண்கள் அணியின் கேப்டன் சோபி டிவைன் கூறியிருக்கிறார்.

நியூசிலாந்து கிரிக்கெட் தலைமை நிர்வாகி டேவிட் வைட், ”இதுபோன்ற ஒரு குறிப்பிடத்தக்க உடன்பாட்டை எட்டியதற்காக வீரர்களுக்கும் முக்கிய சங்கங்களுக்கும் நன்றி மற்றும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எங்கள் விளையாட்டில் மிக முக்கியமான ஒப்பந்தம். பெண்கள் கிரிக்கெட் தொடர்ந்து வளர்ந்து வருவதால், இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது” என்றார்.


இந்தப் புதிய மாற்றத்தால் உள்நாட்டுப் பெண் வீராங்கனைகளின் ஒப்பந்த எண்ணிக்கை 54ல் இருந்து 72ஆக அதிகரிக்கும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

## நூல் அறிமுகம்

# மாயவாத சித்திரிப்பில் எழுதப்பட்டுள்ள நடேசனின் பண்ணையில் ஒரு மிருகம்

முனைவர் ஜொஸப்பின் பாபா
( புனித சேவியர் கல்லூரி பாளையங்கோட்டை )

இலங்கையைச் சேர்ந்த கால் நடை மருத்துவர் நடேசன் அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலப்பகுதியில் சென்னைக்கு அடுத்திருந்த காஞ்சிபுரம் பகுதியில் ஒரு கிராமத்தில் அமைந்திருந்த பண்ணையில் வேலை செய்த போது பெற்ற அனுபவங்களை பின்னணியாக வைத்து எழுதப்பட்ட நாவல்தான் பண்ணையில் ஒரு மிருகம்.




தமிழ்நாடு காலச்சுவடு பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது.

இதன் முன்னுரையில் நடேசன் எழுதியிருக்கும் குறிப்புகளிலிருந்தே இந்த செய்தியையும் அறிய முடிகிறது.

அந்தப் பண்ணையில் மேற்பார்வையாளராக அவர் வேலைக்கு வந்து சேர்வதுடன் கதை ஆரம்பிக்கிறது. ஒரு மிருக மருத்துவராக இருந்தும் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் அங்கு அதே மருத்துவராக வேலை செய்ய சட்டச் சிக்கல்கள் உள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

நடேசன் இதற்கு முன்னரும் நாவல்கள், சிறுகதைகள் எழுதியவர். இந்த எழுத்தாளருக்கு முன்பு, தமிழகத்தைச் சேர்ந்த இன்னொரு மருத்துவர், அங்கு வேலை பார்த்து வந்ததும் கற்பகம் என்ற பெண்ணின் தற்கொலைக்கு காரணமாகியதனால் அவர் அந்த வேலையை விட்டு விரட்டப்பட்டதையும் அறிகிறார்.

புதிய டாக்டராக வரும் இந்தக் கதை சொல்லியின் மனம் எச்சரிக்கையாக இருக்க ஆரம்பிக்கிறது. பிற்பாடு அங்கு வேலை செய்யும் மேஸ்திரி, ராமசாமி, ராணி, அன்பரசி, கிருஷ்ணன் போன்ற கதா பாத்திரங்கள் வழியாக பண்ணையில் நடக்கும் சம்பவங்களை படிப்படியாகத் தெரிந்து வருகிறார்.

இத்துடன் பண்ணையில் தற்கொலை செய்து கொண்ட மூக்குத்தி அணிந்த வெங்காய நிற சேலைக்காரி கற்பகம் மருத்துவரிடம் தன் கதையை சொல்ல ஆரம்பிப்பதுடன் கதை சுவாரசியமாக நகர்கிறது. கனவா நனவா என்ற பேய்க் கதையுடன் வாசகர்களும் டாக்டருடன் திகிலுடன் பண்ணையில் பயணிக்கிறோம்.



பண்ணையை தளமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள தால் மிருகங்களைப் பற்றிய உயிர் அறிவியல், தமிழகத்தில் நிலவும் ஜாதி கலந்த வாழ்க்கை முறை பற்றியெல்லாம் சித்திரிக்கும் ஆசிரியர், ஜாதி மாறி திருமணம் செய்த சொந்த மகளின் கணவரையே கொலை செய்த கார்மேகம் போன்றவர்களையும் கதா பாத்திரங்களாக உலவ விட்டுள்ளார்.

பொதுவாக ஆண் பிள்ளைகள் துஷ்பிரயோகம் ஆவதை கவனித்துக் கொள்ளாத தமிழக சமூக சூழலில், குறிப்பாக பண்ணையில் பாலியல் துஷ்பிரயோகத் திற்கு உள்ளாகும் சிறுவர்களின் கதையை, கதையின் போக்கில் ஒரு முக்கிய புள்ளியாக கொண்டு வந்துள்ளது இந்நாவலின் சிறப்பாகும்.

பெண்கள் குடும்பச் சூழலாலும், மாமியார் மற்றும் கணவரால் துன்புறுத்தப்படுவது, மனைவிக்கு குழந்தை இல்லை என்றால் கணவனுக்கு இரண்டாம் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இவைகளையும் ஆசிரியர் சொல்லியுள்ளார்.

கிராமத்து மக்கள் என்றாலே வெகுளியானவர்கள், நல்லவர்கள் என்று பலரும் எழுதி வரும் தமிழ் இலக்கிய சூழலில், கிராமத்து மக்கள் மனதில் குடிகொள்ளும் வன்மம், குறுக்குச் சிந்தனைகள், தவறை அறிந்தும் துணிவாக செய்யும் முரட்டுத்தனம் போன்ற இயல்புகளையும் கதையில் கொண்டு வந்துள்ளார் நடேசன்.

ஒரு கட்டத்தில் கருப் பையாதான் அந்த கற்பகத்தின் மரணத்திற்கு காரணம் என்று தெரியவந்ததும், இத்தனை கொடிய வனுடன் பண்ணையில் வேலை செய்யப் பிடிக்காது அந்த வேலையை விட முடிவு செய்கிறார்.

கல்வி கற்றோர் என்றாலும் அகதிகளாக ஒரு நாட்டில் வாழும் போது என்னென்ன சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பண்ணை முதலாளிகளின் மனப்பான்மை, மருத்துவர் வாசிக்கும் கார்ல் மார்க்ஸ் புத்தகத்தை ஒளித்து வைக்கும் கருப்பையாவின் வன்மம் என இயல்பாகவே கதையைச் சொல்லி உள்ளார்.

கிராமத்தில் மக்களுக்கு ஒரு தோழராக இருந்து தன் பணியை திறம்படச் செய்வது, பண்ணை மக்களை அன்பாக வேலை வாங்குவது, பண்ணை ஆட்களுடன் சினிமாவிற்கு செல்வது, எளிய மனிதர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்க வீடு வரை செல்வது என டாக்டர் கதாபாத்திரம் இந்நாவலில் மனித நேயத்தின் உச்சம் தொடுகிறது.

கணவன் கொல்லப்பட, கணவன் கொடுத்த ஆடு வளர்ப்புமாக வாழும் கமலம் மேல் டாக்டருக்கு அளவு கடந்து பரிவு இருந்தும் கமலத்தை ஒற்றை கட்டையாகவே கதையில் விட்டு சென்றது கொஞ்சம் பிற்போக்குத் தனம் என்று தோன்றியது.

பேயாக உலாவும் கற்பகம் மற்றும் டாக்டரின் உரையாடல்கள் கதையை சுவாரசியமாக நகர்த்திச் சென்றுள்ளது. கருப்பையா பின் பக்கம் குத்துப் பட்டு கிணற்றில் விழுந்து இறந்த முடிவு தவறு - தண்டனை என்ற காலாகாலத்து கதையோடு ஒத்துப் போகிறது.

Magic realisஅதன்மைகொண்ட நாவலாகவும் அமைந்துள்ளது.

சுருக்கமாக கதையாளரின் கதை சொல்லும் பாங்கு கதையை வாசித்து முடிக்கும் வரையில் வாசகனை விறுவிறுப்பாக வைத்திருந்தது என்றால் மிகை அல்ல.

இந்நாவலை நடேசன், தனது பிரியத்திற்குரிய மறைந்த இலங்கை இடதுசாரித் தோழர் வி. பொன்னம்பலம் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளார்.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ். பிரகலாதன், சங்கானை.**

**கேள்வி:**
தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வைக்கோல் பட்டறை நாய் மாதிரி, அதாவது தாங்களும் செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் விடமாட்டார்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**
அவர் என்ன சொல்ல வருகிறார்? வைக்கோல் பட்டறையில் மாடுகள் வைக்கோல் தின்னுவதை நாய்கள் தடுப்பதுபோல என்கின்றார். அதாவது வைக்கேலை நாயும் தின்னாது மாடுகளும் தின்னவிடாது என்று சொல்வதாக நீங்கள் நினைத்துவிட்டடீர்கள் போல?. வைக்கோல் பட்டறையில் இருக்கும் வைக்கோல்கள் மாடுகளுக்காகத்தானே இருக்கின்றது.

அதை எஜமான் மாடுகளுக்கு தேவையான நேரத்தில் எடுத்து மாடுகளின் இருப்பிடத்திற்கே கொண்டுவந்து தருவார்தானே அதற்கு முதல் ஏன் சாப்பிடுகிறாய் என்று தான் நாய்கள் குலைக்கின்றன. பட்டறையில் இருக்கும்போது மாடுகள் சாப்பிட்டால் வைக்கோல் பட்டறையே நாசமாகப்போய்விடும். அதனைத் தடுப்பதற்காகத்தான் நாய்கள் குலைக்கின்றன. அதைத்தான் அவர் சொல்ல வருகிறார் போலும்.

**கே. ருத்திரா கல்குடா, மட்டக்களப்பு**

**கேள்வி:**
ஜனாதிபதி மாளிகையை சனிக்கிழமை சுற்றிவளைத்து, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகும் வரை அங்கேயே தங்கியிருப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதே. இதற்குப் பின்னராவது ஜனாதிபதி பதவி விலகுவார் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:**
அவர் பதவியிலிருக்கும் வரை யாரும் இலங்கைக்கு உதவமாட்டார்கள் என்பது தெரிகின்றது. அவர் பதவி விலகவேண்டும் என்பதுதான் இந்த வியுக்தியாரின் விருப்பமும். ஆனால், அவர் பதவி விலகினால் அடுத்து என்ன நடக்கும் என்பதை தெரிந்து கொண்டால்தான் நாட்டுக்கும் நல்லது நமக்கும் நல்லது. முதலில் நமது எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் ஒருமித்து ஆகக் குறைந்தது சாதாரண பெரும்பான்மையை எட்டி ஒரு சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கவேண்டும். அந்த அரசு தற்காலிக பிரதமராக ஒருவரை தெரிவு செய்யவேண்டும். அதற்குப் பின்னரே ஜனாதிபதியை அவரது கதிரையிலிருந்து துரத்தவேண்டும் அப்படியெனில்தான் இந்த சர்வகட்சிகளின் ஒருமித்த தெரிவான பிரதமர் தற்காலிக ஜனாதிபதியாக வருவார். அப்படியில்லாமல், அவர் இப்போது இறங்கினால், ஒரேயொரு தேசியப்பட்டியல் எம்.பி.யுடன் பிரதமரான ரணில் அல்லவா ஜனாதிபதியாகிவிடுவார்.

**பி.சிவகுமார், வெள்ளவத்தை, கொழும்பு 6**

**கேள்வி:**
புதிதாக அமைச்சராக நியமிக்கப்பட்ட பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது புகார் கூறியது மாத்திரமன்றி, அவரை நிதி அமைச்சர் பதவியிலிருந்தும் விலக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார். பிரதமரோ அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்கிறார். ஒரு அமைச்சரவையில் உள்ளவர்களே ஒற்றுமையாக இருந்து நாட்டை வழிநடத்த தெரியாதபோது, அவர்கள் நமது பிரச்சினைக்கு தீர்வு தருவார்கள் என்று நாம் நம்பிக்கொண்டு இருப்பது சரிதானா?

**வியுக்தியார்:**
அப்ப நீங்கள் இந்த அரசாங்கம் நமது பிரச்சினைக்கு தீர்வைத்தரும் என்று நம்பிக்கொண்டிருக்கின்றீர்களா? அதுவேறு ஒன்றுமல்ல, தம்மிக பெரேரா வாழ்நாள் முழுவதும் கசினோவில் காலம் கடத்துகின்ற மனுசர். அமைச்சரவையையும் கசினோ என்று நினைத்திருப்பாரோ தெரியவில்லை. பிரதமரும் கசினோக்கள் மீது புதிய வரி விதிக்கவேண்டும் என்று கூறினால், அது அவருக்கு மட்டுமான வரிதானே. மனுசன் சும்மா இருப்பாரா?

# ஒரு மா(நா)ட்டுப் பிரச்சினை

- வ.ந.கிரிதரன் -



ஞாயிற்றுக் கிழமையாதலால் "றோட்டி"னில் அவ்வளவு சனநடமாட்டமில்லை. வாகன நெரிச்சலுமில்லை. பொன்னையாவின் "கொண்டா அக்கோர்ட்" "சென்ற்கிளயர்"மேற்கில் ஆறுதலாக ஊர்ந்துகொண்டிருக்கின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில் அல்லது விடுமுறை நாட்களில் காரோடுவதென்றால் பொன்னையாவிற்கு மிகவும் பிடித்தமானதொன்று. எந்தவித "டென்ஷ"னுமின்றிப் பின்னால் "ஹோர்ன்" அடிப்பார்களேயென்ற கவலையேதுமின்றி ஆறுதலாக நகரை ரசித்துச் செல்லலாமல்லவா? இருந்தாலும் அண்மைக்காலமாகவே ஞாயிற்றுக்கிழமைகளிலும் "ஹோர்ன்" அடிக்கத்தான் தொடங்கி விட்டார்கள். நகரம் பெருக்கத் தொடங்கி விட்டது. "நகரம் பெருக்கப் பெருக்க சனங்களும் பொறுமையை இழக்கத் தொடங்கிட்டாங்கள் போலை" இவ்விதம் இத்தகைய சமயங்களில் பொன்னையா தனக்குத்தானே சொல்லிக் கொள்வான். "நகரம் வளருகின்ற வேகத்திற்குச் சமனாக சனங்களின்ற வாழ்க்கைத்தரமும் உயர வேண்டும். இல்லாவிட்டால் பிரச்சினைதான்" என்றும் சில வேளைகளில் ஒருவித தீவிர பாவத்துடனும் அவன் சிந்தித்துக் கொள்வான்.

"ஓல்ட்வெஸ்டன்" றோட்டைக் கடந்து "கீல் இண்டர்செக்ச" னையும் கடந்து கார் விரைந்தது. இடப்புறத்தில் "கனடாப்பக்கர்ஸி"ன் "ஸ்லோட்டர்" ஹவுஸ்" பெரியதொரு இடத்தைப் பிடித்துப் படர்ந்திருந்தது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் மாடுகளைத் துண்டு போடும் பெரியதொரு கசாப்புக்கூடம்.

பொன்னையா இயற்கையிலேயே சிறிது கருணை வாய்ந்தவன். ஏனைய உயிர்களின்மேல் அன்பு வைக்க நினைப்பவன். ஊரிலை இருக்கும் மட்டும் சுத்த சைவம்தான். இங்கு வந்ததும் கொஞ்சங்கொஞ்சமாக மாறி விட்டான். "இங்கத்தைய கிளைமட்டிற்கு இதையும் சாப்பிடாட்டி மனுஷன் செத்துத் துலைக்க வேண்டியதுதான்" . திடீரென் ஊர்ந்து கொண்டிருந்த "டிரபிக்" தடைப்பட்டது. பொன்னையா மணியைப் பார்த்தான். நேரம் பதினொன்றையும் தாண்டி விட்டிருந்தது. பஞ்சாப்காரன் பத்து மணிக்கே வரச்சொல்லியிருந்தான்.

பொன்னையாவிற்குத் தெரிந்த ஓரளவு நாணயமான கராஜ் அந்தப் பஞ்சாப்காரனின் கராஜ்தான். "ஸ்டியரிங்" கில் மெல்லியதொரு உதறல் நேற்றிலிருந்து. அதனைக் காட்டத்தான் பொன்னையா விரைந்து கொண்டிருந்தான். "நேரங்கெட்ட நேரத்திலை இதென்ன டிரபிக் புளக்.." இவ்விதம் எண்ணியபடி "டிரபிக்" தடைப்பட்டதற்குக் காரணம் என்னவாகயிருக்குமென் எதிரே நோக்கினான்.

இதற்குள் "றோட்" டுக் கரையில் சனங்கள் விடுப்பு விண்ணானம் பார்க்கக் கூடத்தொடங்கிட்டுதுகள். இந்த விஷயத்தில் எல்லா மனுஷருமே ஒன்றுதான். எதிரே அவன் பார்வையை மறைத்தபடி கனடா பக்கர்ஸிற்குச் சொந்தமான பெரிய "ட்றக்" கொன்று நின்றதால் இவனால் ஒழுங்காகப் பார்க்க முடியவில்லை.

"றோட்"டுக் கரையில் விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்த சைனாக் காரனொருவனைப் பார்த்து ""ஏ.. மேன் ..வட்ஸ் த மாட்டார்? வட்ஸ் கோயிங் ஒன்..." பலமாகக் கத்தினான்.

அதற்கு அந்தச் சைனாக்காரன் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ""பீவ்..எஸ்கேப்..ஸ்லோட்டர்.." என்றான்.

அருகிலிருந்த வெள்ளையனொருவன் சைனாக்காரனின் ஆங்கிலத்தைக் கேட்டுச் சிரித்தான். இவனுக்கும் சிரிப்பாகவிருந்தது. ஆனால் அந்த ஆங்கிலம் கூட விளங்கியது. மாடொன்று "ஸ்லோட்டர் ஹவுஸ்"ஸிலிருந்து தப்பி வந்து விட்டது என்பதைத் தான் அந்த சைனாக்காரன் அவ்விதம் கூறினான் என்பதும் விளங்கியது.

மரணத்திலிருந்து தப்பிவந்த அந்த இனந்தெரியாத மாட்டின் மேல் ஒருவித பரிதாபம் தோன்றியது. அநுதாபம் படர்ந்தது. காரை வெட்டி "றோட்" டுக்கரையோரம் நிறுத்தி விட்டு பொன்னையா காரை விட்டிறங்கி வேடிக்கை பார்க்கும் சனங்களில் ஒன்றானான். "ஸ்ட்ரீட் கார்" செல்லும் இருப்புப் பாதையின் மேல் , சுற்றிவர வேடிக்கை பார்த்தபடி நிற்பவர்களைப்பார்த்து முறைத்தபடி அந்த மாடு நின்றது. அதன் கண்களில் மரண பயம் கவ்விக் கிடந்ததை இவன் உணர்ந்தான். அதைப் பார்க்கப் பாவமாயிருந்தது. பொன்னையாவிற்குக் கவலை தோன்றியது.

உருண்டு திரண்டு கொழுகொழுவென்று வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தது. அருகில் சென்று பிடிக்க முனைந்த "கனடா பக்கர்ஸ்" ஊழியர்களைப் பார்த்து முறைத்தது. முட்டுவது போல் பாசங்கு செய்து முரண்டு பிடித்தது. அருகில் ஒருவரையும் வரவிடாமல் தடுத்து வைப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருந்தது.

எவ்வளவு நேரத்திற்குத்தான் அதனால், அந்த ஐந்தறிவு உயிரினால், தாக்குப் பிடிக்க முடியும்? "மட மாடே! மனிதனுடன் போட்டி போட்டு உன்னால் வெல்ல முடியுமா என்ன?"

திடீரென பொன்னையாவிற்குச் சிந்தையில் ஒரு எண்ணம் எழுந்தது.

"இந்த மாட்டின் மனநிலை என்னவாயிருக்கும்?" அருகிலுள்ள ஸ்லோட்டர் ஹவுஸிற்குள் வெட்டுப் படுவதற்காகக் காத்து நிற்கும் ஏனைய மாடுகளின் ஞாபகமும் எழுந்தது. "இவ்விதம் தப்பிவர இந்த மாடு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்?"

"கிடைத்த சுதந்திரத்தின் நிரந்தரமற்ற தன்மையைப் பாவம் இந்த மாட்டால் உணரமுடியவில்லை..அதனால்தான் தன்னுயிரைக் காத்துக்கொள்ள கிடைத்த அற்ப சுதந்திரத்தைப் பாதுகாக்க இந்த மாடு வீராவேசத்துடன் முயல்கிறது.."

ஊரில் இருப்பவர்களின் நினைவுகளும் எழாமலில்லை..." இந்த மாட்டைப் போன்ற நிலையில் இருப்பவர்கள் எத்தனை பேர்?..அரைகுறையாகத் தப்பி மீண்டும் அகப்பட்டவர்கள்.. தப்புவதற்கு முடியாமல் சமாதியாகிப் போனவர்கள்..."

மீண்டும் கவனம் மாட்டின் மேல் திரும்புகின்றது. இன்னமும் அது மூர்க்கத்துடன் தன்னை நெருங்குபவர்களை எதிர்த்து நிற்கின்றது. யாரும் நெருங்காத சமயங்களில் ஒருவித சோகம் கலந்த பாவத்துடன் அமைதியாக ஒருவித பயத்துடன் நிற்கிறது.

அதன் கண்களிருந்து மெல்ல மெல்ல இலேசாகக் கண்ணீர் வடிகிறது..எதை நினைத்து அழுகிறது? தன் பரிதாபகரமான நிலையை நினைத்தா?தன்னை சமாதியாக்குவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் மனிதர்களால் தனக்கேற்பட்ட நிராதரவான நிலையை உணர்ந்தா? ஏன் அது அழுகிறது?

திடீரெனப் பொன்னையாவிற்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. "ஏன் இந்த மாட்டிற்குரிய விலையைக் குடுத்து, இதன் உயிரைக் காப்பாற்றினாலென்ன? ஊரிலையென்றாலும் வீட்டு வளவிலை போய்க் கட்டி வைக்கலாம்... இங்கு எங்கு போய்க் கட்டி வைப்பது..? அப்பார்ட்மென்றிலையா..?அப்படித்தான் காப்பாற்றினாலும் இந்த ஒரு மாட்டைக் காப்பாற்றுவதால் மட்டும் இதன் நிலையில் இருக்கின்ற ஏனைய மாடுகளின் பிரச்சினை தீர்ந்து விடுமா..?"

இதற்கிடையில் யாரோ மாடு "டிரபிக்"கிற்குத் தடையாயிருப்பதை பொலிஸிற்கு அறிவித்து விட்டார்கள் போலும்.. "எமர்ஜன்ஸி பிளாஸிங் லைட்"டுடன் "சைரன்" முழங்க பொலிஸ் காரொன்று விரைந்து வந்து இறங்கியது. இரு பொலிசார் இறங்கினார்கள். கயிறொன்றில் வளையம் செய்து சிறிது நேரம் முயற்சி செய்தார்கள். பலனில்லை. மாடு மிகவும் உறுதியாகவே எதிர்த்து நின்றது. இதற்கிடையில் விஷயத்தை மோப்பம் பிடித்துப் பத்திரிகைக்காரர்கள், தொலைக் காட்சிக்காரர்களென்று "கமரா"க்களுடன் கூடி விட்டனர்.

மாடு தன்னுயிரைக் காப்பதற்கானதொரு போராட்டத்தில், ஜீவமரணப் போராட்டத்திலீடுபட்டிருக்கின்றது. இதை அடக்க, வேடிக்கை பார்க்க, படம் பிடிக்க ஒரு கூட்டம். ஒன்றிற்கும் செயல்பட முடியாத , இயலாத கூட்டம். தானும் அக்கூட்டத்தில் ஒருவன் என்பதை நினைக்கையில் பொன்னையாவிற்குத் தன்மேல் ஒருவித வெறுப்புக்கூடத் தோன்றியது.

தங்கள் முயற்சி சிறிது தோல்வியுற்றதைக்கண்ட பொலிஸார் தங்களிற்கு கூடிக் கதைத்தார்கள். இதற்குள் வீதியில் இரு திசைகளிலும் வாகனங்கள் பெருமளவில் முடங்கத் தொடங்கிவிட்டன.

தொலைவிலிருந்தவர்கள் போக்குவரத்து தடைப்பட்டதன் காரணத்தை அறியாத நிலையில் "ஹோர்ன்"களை மாறிமாறி அடிக்கத் தொடங்கிவிட்டார்கள். நிலைமை கட்டுமீறுவதைப் பொலிஸார் உணர்ந்தார்கள்.

இறுதியில் மாட்டுப் பிரச்சினை ஒரு முடிவிற்கு வந்தது.

ஆறறிவுப் பிராணியின் முன்னால் சுதந்திர வேட்கை நசுக்கப்பட்ட நிலையில் "ட்ரான்குலைசரா"ல் மயக்கப்பட்டு சாய்ந்த மாட்டைத் தூக்கிய கனடாப் பக்கர்ஸ் ஊழியர்கள் அதனை "ஸ்லோட்டர் ஹவுஸி"ற்குள் கொண்டு சென்றார்கள்.

ஒருவழியாகப் போக்குவரத்துச் சீர்பட்டது. சனங்கள் ஒவ்வொருவராகக் கலையத் தொடங்கினார்கள்.

பஞ்சாப்காரன் திட்டப் போகின்றானென்ற நினைப்புடன் தன்காரில் பாய்ந்தேறினான் பொன்னையா. கூடவே அடிக்கடி மிருகங்களை வதைப்பதாகக்கூறி வழக்குப் போடும் "ஹியுமேன் சொசைடி"யின் ஞாபகமும் வந்தது. சிரிப்பு வந்தது.

சிறிது போராடித் தோல்வியுற்ற மாட்டின் நிலைமை அநுதாபத்தை தந்தாலும் அதன் சுதந்திர வேட்கையும் அதற்காக அது போராடிய தீவிரமும் அதன் மேல் ஒருவித பக்தியை, பெருமிதத்தை ஏற்படுத்தியது. சொன்னால் நம்ப மாட்டீர்கள்! அன்றிலிருந்து பொன்னையா மீண்டும் முழுச் சைவமாகிவிட்டான்.

# வலுக்கும் பலூசிஸ்தான் போராட்டம்:

## பாகிஸ்தானுக்கு பாரிய அழுத்தம் சீனாவிற்கும் பெரிய தலைவலி!


**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

முதன்முறையாக பாகிஸ்தானின் அரசியல் கட்சியிடமிருந்தே, தனி பலூசிஸ்தான் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருப்பது குறித்து வெளிப்படையான குரல் எழுந்துள்ளது. கடந்த மாத இறுதியில் எதிர்க்கட்சி பி.டி.எம் (PDM) நடத்திய பேரணியில், ஜாமியத் உலமா-ஈ-பாகிஸ்தான் தலைவர் ஓவைஸ் நூரானி ஆசாத், தனி பலூசிஸ்தான் அமைக்கப்படும் அறிவித்தார்.

**எதிர் கட்சியின் தனிநாடு கோரிக்கை:**

பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் ஏற்பாடு செய்த பேரணியில், பலூசிஸ்தானை தனி நாடாக ஆக்க வேண்டும் என்று எழும் கோரிகை பாகிஸ்தானில் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. ஜாமியத் உலமா- பாகிஸ்தான் தலைவர் ஒவைஸ் நூரானி நடத்திய பேரணியில் ஆசாத் பலூசிஸ்தானை உருவாக்குவதாக அறிவித்தார். பலூசிஸ்தான் மக்களை பாகிஸ்தான் அரசு கொள்ளை அடிக்கிறது என அவர் குறிப்பிட்டார். சுதந்திர பலூசிஸ்தான் வேண்டி மேலோங்கும் மக்கள் போராட்டத்தினால் பாகிஸ்தானுக்கு மட்டுமின்றி சீனாவிற்கும் பாரிய தலைவலியை கொடுப்பதை களத் தகவல்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

கள நிலவரங்களின்படி கடந்த ஜீன் 19 இல் தென் மேற்கு பாகிஸ்தானில் பலுசிஸ்தான் போராளிகளுக்கும் அரச பாதுகாப்புப் படையினருடன் ஞாயிற்றுக் கிழமை நடந்த மோதலில் பலுசிஸ்தான் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 6 போராளிகள்







கொல்லப்பட்டதாக ராணுவ அறிக்கை தெரிவித்துள்ளது. தென்மேற்கு பாகிஸ்தானில் ஒரு மலைத் தொடரில் கிளர்ச்சியாளர்கள் இருப்பதாக ஒரு ரகசிய தகவலைப் பெற்ற பின்னர் அரச பாதுகாப்புப் படைகள் நடவடிக்கையை ஆரம்பித்தன என்று இராணுவத்தின் ஊடகப் பிரிவான இன்டர் சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் (ISPR) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சீனாவிற்கும் தலைவலி ?**

பாகிஸ்தானில் பலூச் மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை கண்டு பாகிஸ்தான் இராணுவம் அச்சதில் உள்ளதாக்கவும் கூறப்படுகிறது. இது சீனாவிற்கும் தலைவலியை அதிகரித்துள்ளது. ஏனென்றால், சீனா பலுசிஸ்தானில் லட்சக்கணக்கான டாலர்களை முதலீடு செய்துள்ளது, இந்த பகுதி சீன புறநகராக மாறி உள்ளது என்றே கூறலாம். இந்த பிராந்தியத்தில் இயற்கை வளங்கள் நிறைந்திருக்கின்றன, இங்கிருந்து தாதுக்களை பிரித்தெடுத்து, பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தை வளமாக்கி வருகின்றனர். இதனால், பலூச் மக்கள் நெடுங்காலமாகவே பாகிஸ்தான் அரசை எதிர்த்து வருகின்றனர்.

சீனாவிற்கு நிலங்களை தாரை வார்க்கும் பாகிஸ்தான் அரசின் செயலை எதிர்க்கும் பலூசிஸ்தானில் உள்ள மக்கள், பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ கடத்தப்படுகின்றனர். பின்னர் அவர்களின் சடலங்கள் தான் கிடைக்கின்றன. பாகிஸ்தான் ராணுவத்தின் இந்த மிருகத்தனமான நடவடிக்கைக்கு உள்ளூார் மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆயினும் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள போராளிகள் பாகிஸ்தான் இராணுவத்தை தாக்கி பதிலடி கொடுத்து வருகின்றனர்.

கடந்த மே இறுதியில் பாகிஸ்தான் துணை ராணுவப் படைகளின் மீது நடத்திய தாக்குதலில் 14 அரச வீரர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பலுச்சிஸ்தான் விடுதலையை கோரும் பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் எப்போதும் சீனா பாகிஸ்தான் பொருளாதார தாழ்வார திட்டமான CPEC திட்டதை எதிர்த்து வருகிறது.

**பலூசிஸ்தான் தனிநாட்டு போராட்டம் :**

1947ல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971ல் வங்காள தேசமாக மலர்ந்தது.




இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்தூனியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன.

பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்நாட்டில் மிகப்பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.




**பலூசிஸ்தான் வரலாறு:**

பிரிட்டீஷிடம் இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்த 1947, டிச. 16-ஆம் திகதி அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப்பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன.

இந்நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறை வைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948- ஆம் ஆண்டு முதல் அப்பகுதி பாகிஸ்தா னின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**மறைமுக இந்திய ஆதரவு:**

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள் தார்மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை மன்றமான “ஹிந்த் பலூச்” எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 1948- ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

**பலூசிஸ்தான் போராட்ட சக்திகள்:**

இந்நிலையில் பலுசிஸ்தான் சுதந்திரம் வேண்டி தனி நாடு தொடர்பாக பலூசிஸ்தான் சுதந்திர மன்றம் மிகப்பெரிய அளவில் போராட்டங் ஷகளை முன்னெடுத்து வருகிறது. இதில் பலூசிஸ்தான் ஜனநாயகக் கட்சி, பலூசிஸ்தான் தேசிய இயக்கம், பலூசிஸ்தான் மக்கள் கட்சி, நாடு சாரா தேசிய அமைப்பு, அல்வாஸ் அரபு முன்னணி மற்றும் ஏப்ரல் 15 அல்-அவாஸ் உள்ளிட்ட அரசியல் இயக்கங்கள் கலந்து கொண்டுள்ளன.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C  2) E  3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16  2) 15  3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்  2) நிஷான்  3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13  2) 14  3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்  2) செவ்வகம்  3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm  2) 18cm  3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3  2) 2  3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14  2) 10  3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ  2) ஆ  3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்  2) 3 தடவைகள்  3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள்  2) 5 தடவைகள்  3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2  2) 3  3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**25.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கொழும்பில் நேற்று மாபெரும் எழுச்சி!





















# ரணில் கூட்டும் கூட்டத்தில் நாம் பங்கேற்கமாட்டோம்!

## சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை. 10

பிரதமர் ரணில் விக் கிரமசிங்க விடுத்துள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தை புறக்கணிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க வும் பதவி விலகவேண் டும் என்பதே மக்களின் கோரிக்கை. தற் போதைய நிலைக்கு பிரதமரும் பொறுப்பு கூறவேண்டும். எனவே, அவர் அழைக்கும் கூட்டத்தில் பங்கேற்கமாட் டோம் என எதிர்க்கட்சித் தலைவர் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார். (அ)

# ஊடகவியலாளர்கள் நான்கு பேரை கடுமையாக தாக்கிய அதிரடிப்படை

கொழும்பு, ஜூலை. 10

செய்தி நேரலைப் பணியில் ஈடுபட்டிருந்த தென்னிலங்கையின் பிரபல தனியார் ஊடகத்தின் ஊடகவியலாளர்கள் நால்வர் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு 07இல் அமைந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்ல வளாகத்தில் நடைபெற்ற போராட்டத்தை நேரலை செய்துகொண்டிருந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட்ட நால்வரே தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை,

தமது செய்தியாளர்கள் மட்டும் இலக்குவைத்து தாக்கப்படுவதாக தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் பணியாற்றும் ஊடகம் குற்றம்சாட்டியுள்ளது. (அ)

# கோட்டாவின் ஊடக பணிப்பாளர் ஹெட்டியராச்சி பதவி விலகல்

கொழும்பு, ஜூலை. 10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஊடகப் பணிப்பாளரான சுதேவ ஹெட்டியராச்சி தனது பதவியில் இருந்து விலகியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜூலை 4 ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்துக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

# ஜனாதிபதியாக தொடர்ந்தும் பதவி வகிக்ககூடிய இயலுமை உள்ளதா?

கொழும்பு, ஜூலை. 10

தற்போதைய நிலைமையிலும் ஜனாதிபதியாக தொடர்ந்தும் பதவி வகிக்க கூடிய இயலுமை உள்ளதா என்று சிந்திக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. இந்தநிலைமையை மாற்றி நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த பிரதமர், சபாநாயகர், அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து துரிதமாக செயற்பட வேண்டும்.

அத்துடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தப்படக்கூடாது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. அத்துடன், வரலாற்றுப் பெறுமதி மிக்க பொதுச் சொத்துக்களான ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் சொத்துக்களைப் பாதுகாக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது. (அ)

## பதவி விலக...

நிலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசர அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த சந்திப்பு நேற்று மாலை 04 மணியளவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட்டவர்கள் பங்குகொண்டனர்.

சூம் தொழில்நுட்பம் ஊடாக சுதந்திக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பங்குகொண்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உட்பட்ட தலைவர்கள் குறித்த கூட்டத்தைப் புறக்கணித்து ஜனாதிபதி, பிரதமர் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதேவேளை,

கட்சிக் கூட்டத்தில் பங்குகொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தினர்.

முன்னதாக கட்சித் தலைவர்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாக ஜனாதிபதி பிரதமரிடம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிந்துள்ளது.

இதனிடையே,

பிரதமர் பதவி விலகவேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தார் என்று ரவூப் ஹக்கீம் தனது சமூகவலைத்தளப் பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

## தீர்மானங்களை...

கள் குறித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்த்தன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலமை அறிவித்துள்ளார்.

நேற்றைய கூட்டத்தில் எட்டப்பட்ட நான்கு முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலகவேண்டும்,

2. புதிய தலைவரை நியமிப்பதற்காக ஏழு நாட்களில் பாராளுமன்றம் கூட்டப்படும்.

3. புதிய பிரதமரின் கீழ் ஒரு இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை நியமிக்க வேண்டும்.

4. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கவும் குறுகிய காலத்துக்குள் தேர்தலை நடத்தி அரசாங்கத்தை அமைக்கவேண்டும்-ஆகியவையே அந்த 4 தீர்மானங்கள். (அ)

## 13ஆம் திகதி...

நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைச் சபாநாயகர் நேற்று மாலை ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இதன் பின்னர் ஜனாதிபதி தனது முடிவை சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு அவர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார் என சபாநாயகர் நேற்றிரவு தகவல் வெளியிட்டார்.

அமைதியான முறையில் ஆட்சியைக் கையளிப்பதற்காகவே ஜனாதிபதி புதன் கிழமை வரை அவகாசம் கோரியுள்ளார். இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்துமாறு அவர் என்னிடம் கோரினார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கூறினார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

## ஜனாதிபதி...

திபதி பதவி விலகவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இவ்வாறான நிலையில் அனைத்துக் கட்சிகளின் முடிவுக்கு அமைய பதவி விலக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்மதம் தெரிவித்துள்ளார் என தகவல்கள் தெரிவித்தன.

முன்னதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு உடன்படுவேன் என ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்திருந்தார் என பிரதமர் அலுவலகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் அனைவரும் இணைந்து ஜனாதிபதி பதவி விலகுமாறு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்தனர். (அ)

## பந்துலவும்...

உறுப்புரிமையில் இருந்தும் அவர் விலகியுள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை உட்பட்ட அனைத்து அமைச்சுக்களிலிருந்தும் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சுயேச்சை உறுப்பினராகத் தொடரவுள்ளதாகவும் பந்துல தெரிவித்தார். (அ)

## அலரி...

என்பவற்றுக்குள் நுழைந்த போராட்டக்காரர்கள் நேற்று மாலை அலரி மாளிகையையும் கைப்பற்றினர்.

போராட்டக்காரர்கள் பெரும் எண்ணிக்கையில் அலரிமாளிகைக்குள் நுழைந்த நிலையில் அங்கிருந்த பாதுகாப்புப் படையினர் விலகிச் சென்றனர். (அ)

## பிரதமர் ரணிலின்...

வல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் தற்போது பிரதமரின் இல்லத்திற்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

## மக்களின்...

கான போராட்டக்காரர்கள் வந்தனர், பொலிஸாரால் இடப்பட்டிருந்த சாலைத் தடைகள் அவர்களால் அகற்றப்பட்டன.

இதனை அடுத்து பொலிஸ் குழுக்கள் அப்பகுதியை விட்டு வெளியேறின.

இதற்கிடையில், போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டதுடன், அதனை மீளவும் போராட்டக்காரர்கள் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் நோக்கி வீசினர்.

## மொட்டு கட்சி...

பெரும, டிலான் பெரேரா உட்பட மொட்டு கட்சியின் 16 எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு நேற்று அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த கடிதத்தின் ஊடாகவே, பதவி விலகுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரதமர் பதவியில்...

பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் இந்த வாரம் தொடங்கப்படவுள்ளமை, உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் இந்த வாரம் சிறிலங்காவுக்கு வரவுள்ளமை மற்றும் அனைத்துலக நாணய நிதியத்தின் கடன் நிலைத்தன்மை அறிக்கை என்பனவற்றை கருத்திற்கொண்டு இந்த தீர்மானத்தை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொள்வதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளதன் மூலம், அனைத்துக்கட்சி அரசு அமைக்க அனைத்துக்கட்சிகளும் தமக்குள் இணக்கம் கண்டதும் அவர் பதவி விலகுவார் என்று நம்பப்படுகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# கோட்டா பதவி விலகினால் அதன் பின் என்ன நடக்கும்?

கொழும்பு, ஜூலை. 10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து விலகுமாறு வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர் என்ன நடக்கும் என்பதை சிங்கள இணையத்தளம் ஒன்று விரிவான செய்தியாக வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பதவிக்காலம் முடிவதற்குள் ஜனாதிபதி பதவி விலகினால், அந்த பதவி வெற்றிடமாகி விடும்.

அவ்வாறான நிலையில், அரசியலமைப்பின் 40 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி ஒரு சிறப்பு நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதியின் வெற்றிடமான பதவிக்கு பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களில் ஒருவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஜனாதிபதி அந்த பதவியில் இருந்து விலகினால், அந்தப் பதவிக்கு மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்படல்வேண்டும்.

அத்தகைய கூட்டத்தில், பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர், ஜனாதிபதியின் பதவி விலகலை பாராளுமன்றத்துக்கு அறிவித்து, வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுக்களை ஏற்கும் திகதியை நிர்ணயிக்கவேண்டும்.

ஜனாதிபதி பதவிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டால், அந்த நபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக பொதுச் செயலர் அறிவிக்க வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் பரிந்துரைக்கப்பட்டால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அந்த நபர் அளிக்கப்பட்ட வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மை பெற்று தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் பாராளுமன்றத்தினால் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை வகுத்துள்ளது.

ஜனாதிபதி பதவி வெற்றிடத்துக்கும் புதியவர் ஒருவர் பதவியேற்பதற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தற்போதைய பிரதமர் தற்காலிக ஜனாதிபதியாக செயற்படுவார். இந்த காலப்பகுதியில் பிரதமராக செயற்படுவதற்கு அமைச்சரவையில் இருந்து ஒரு அமைச்சர் நியமிக்கப்படல் வேண்டும்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி, முன்னைய ஜனாதிபதியின் மிகுதி காலத்திற்கு பதவியில் இருக்க முடியும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி கோட்டாவின் கட்டிலில் ஓய்வெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள்



கொழும்பு, ஜூலை. 10

ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு சுற்றித் திரிந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் படுக்கையறைக்குள் நுழைந்து அவரது படுக்கையில் அமர்ந்தனர். சிலர் அங்கு நின்றவாறு செல்பி எடுத்துக் கொண்டனர். (அ)

## பாடசாலைகள் விடுமுறை மேலும் ஒரு வாரம் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை. 10

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை அடுத்து பாடசாலைகளுக்கு விடப்படிருக்கும் விடுமுறை மேலும் ஒரு வாரம் நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் பாடசாலைகளை இயக்குவது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கும் முக்கிய கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் இவ்வாறு மேலும் ஒரு வாரத்துக்கு பாடசாலைகளுக்கான விடுமுறை நீடிக்கப்படுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அரச அங்கீகாரம் பெற்ற சகல பாட சாலைகளுக்கும் வரும் திங்கட்கிழமை முதல் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்வரும் 18 ஆம் திகதி பாடசாலை மீள ஆரம்பிக்கடும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## சஜித் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜூலை. 10

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வைரஸ் காய்ச்சலால் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக் கோரி நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தியை வழி நடத்தவிருந்த நிலையிலேயே சஜித் பிரேமதாஸ காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மீது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். (அ)

## ஊரடங்கு உத்தரவு நீக்கம்!

கொழும்பு, ஜூலை. 10

மேல் மாகாணத்தில் சில பொலிஸ் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று காலை 8 மணிக்கு தளர்த்தப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பை பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்தது.

நீர்கொழும்பு, களனி, நுகேகொடை, கல்கிசை, கொழும்பு வடக்கு, தெற்கு மற்றும் கொழும்பு மத்தி ஆகிய பொலிஸ் பிரிவுகளில், நேற்று முன் தினம் இரவு 9 மணி முதல் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக கோரி மட்டக்களப்பிலும் நேற்றுப் போராட்டம்




மட்டக்களப்பு, ஜூலை. 10

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை பதவி விலகுமாறு நேற்று நாடு முழுக்க முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு இணைவாக மட்டக்களப்பிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்தினாலும் பொதுமக்களினாலும் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று காலை காந்தி பூங்காவில் ஒன்றுகூடிய இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்போதைய நிலையில் மருந்தகங்களுக்கு மருந்து வராத காரணத்தினாலும் எரிபொருள் நெருக்கடி காரணமாக ஊழியர்கள் கடமைக்கு வராத காரணத்தினாலும் மக்களும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதுடன் தாமும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் பதவி விலகி ஆட்சியை சிறந்த முறையில் கொண்டு செல்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

## ஆர்ப்பாட்டக்காரர்களை சுட உத்தரவிட்டார் கோட்டாபய?

### ஐ.நா.வில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை. 10

கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ துப்பாக்கியால் சுடுமாறு படையிருக்கு உத்தரவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபயவின் இந்த உத்தரவு தொடர்பான முறைப்பாடு ஐக்கிய நாடுகள் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்கில் பரவி வருகின்றது.

பாஷண பிரபாஷண தென்னக்கோனின் முகநூலில் இந்த பதிவு வெளியிடப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ)

## ஊடக நிறுவனமும் தப்பவில்லை!

கொழும்பு, ஜூலை. 10

'அத தெரண' ஊடக நிறுவனத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஆதரவாக செய்திகளை வெளியிட்டு வந்தமைக்காக இந்த நாட்டிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊடக நிறுவனத்தை முற்றுகையிட்டதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

## கட்டுநாயக்கவில் இராணுவம்

கொழும்பு, ஜூலை. 10

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பெருமளவிலான இராணுவத்தினர் நேற்று திடீரென வரவழைக்கப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியதையடுத்து, விமான நிலையத்துக்கு பெருமளவிலான இராணுவம் வரவழைக்கப்பட்டு சிறப்பு பாதுகாப்பு போடப்பட்டதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

## ராஜித மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூலை. 10

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன மீது ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியது.

கொழும்பு கோட்டையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், அமைச்சரின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் அவரை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

நேற்றைய போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பிலிருந்தும் வருமாறு ராஜித சேனாரத்ன கடந்த சில நாட்களாக பல்வேறு ஊடகங்கள் ஊடாக பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-சிவா
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




**இரவு**
07.00 மணி : SPOTLIGHT- சட்டத்தரணி
சுகாஸ்-ஊடக பேச்சாளர் த.தே.ம
முண்ணனி



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: நேர்கொண்ட பார்வை



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகயேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு